# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் ௨௨ | விய—புரட்டாசி 1946—செப்டம்பர் | மலர் ௪

## வருந்துகின்றேம்.

நம் கரந்தைத் தமிழ்ச் சங்கப் புரவலருள் ஒருவராயிலங்கியவரும், திக்கற்ற மாணவர்கட்குக் கிழமைதோறும் எண்ணெய் அளித்து, நீராடச் செய்து, கிழமைக் கிருநாள் ஒரு நாள் உணவளித்து ஓம்பி வந்தவரும், சங்கத்திற்கு ஆண்டொன்றிற்கு நூறு வெண்பொற் காசுகள் நன்கொடை வழங்கிச் சங்கத்தைப் புரந்து வந்தவரும் ஆகிய கரந்தை, திருவாளர், வ. மருதப்பா பிள்ளை அவர்கள் விய வாண்டு ஆவணித் திங்கள் ஆறும் நாள் இறைவன் றிருவடி நீழல் அடைந் தார்கள் என்பதனைக் கேட்டு மிக வருந்தினேம். இவரைப் போன்று, சங்கத்தின்பால் அன்புடையவர் சிலர் இருப்பின் இன்னும் எத் துணையோ தாய் தகப்பனின்றி அனாதையாய்த் தெருவிற் றவிக்கும் பிள்ளைகளை யெல்லாம் பள்ளிக்கூடத்திற் சேர்த்து உண்டியும் உடை யும் அளித்துக் கல்வி யளித்துத் தமிழ் நாட்டிற்குப் பயன்படும் நன் மக்களாகச் செய்யலாமே என யாம் பலகாலும் எண்ணி மகிழ்வேம். திக்கற்ற மாணவர்கட்குத் தாயாய்த் தந்தையாய், பிறவுமாய் நின் றுதவிய இவர்களின்மறைவு எம்மை வருந்தச்செய்ததாயினும் இவரின் மக்கள் இவரைப் போன்றே இவர் விரும்பி யோம்பிய அறங்களைச் செய்து புகழ் கொள்வார்கள் என எண்ணி ஆறுதலுறுகின்றேம். திக்கற்றார்க்குப் பற்றுக்கோடாய்த் திகழ்ந்த இவரின்னுயிர் இறைவன் றிருவடி நீழலில் இன்புற்றுத் திளைக்க இறைவனை வழுத்தி வணங்கு கின்றேம். இவரின் பிரிவிற்காற்றாது யாம் வருந்திக் கூறிய இரங்கற் பாக்களைப் பொழிலன்பர்களின் பொருட்டு அடுத்த பக்கத்திற்றந்துள் ளேம். இவர் பிரிவால் வருந்தும் இவர் பிள்ளைகட்கும் பெயரர்கட்கும் பிறர்க்கும் எம் ஆழ்ந்த துயரினை அறிவித்துக் கொள்ளுகின்றேம்.

கரந்தைத்

# திருவாளர். வ. மருதப்பா பிள்ளை அவர்களின்

## மறைவுக் கிரங்கி வருந்திக் கூறிய இரங்கற்பாக்கள்.

கரந்தைநகர் அகம்படியர் குலத்தலைவ! கருதுபொருள் கவின ஈட்டி
வரந்தருமா றுயர்சங்கம் வளர்ந்திடவே அதைப் புரந்த வண்மை யாள!
அரந்தைகெடுத் தடைந்துள்ள ஆருமிலா மாணுக்கர் அருமை யோர்ந்து
புரந்துவந்த புரவலனே! பொன்னுலகம் எமைப்பிரிந்து புகுந்தா யந்தோ!

இத்தலமார் அகம்படியர் எழிற்குடியார் பெருமைசொள இறைமை கொண்டே
ஒத்தவுயர் நலம்பயக்கும் ஒள்ளியநற் பொருளீட்டி உமாம கேசன்
வைத்தபெருஞ் சங்கத்தின் வளன்வேண்டி ஆண்டு தொறும் வரிசையாக
முத்தெனமுன் னூறுவெண்பொன் முதலளித்தோய்! முனைவனடி முன்ன
லாமோ?

திருவளருஞ் சோணாட்டிற் றிகழ்காந்தைத் தமிழ்ச்சங்கம் சிறந்தே யோங்கி
வருநாளில் வெள்ளிவிழா மகிழ்பெருகக் கொண்டாடி மகிழும் போது
பெருவளவ! நினதில்லிற் பெருஞ்சோறே புசரித்த பெற்றி எண்ணி
உருகியுளங் கவலவிவண் உயிர்நீத்தாய்! மருதப்பா உள்ள லென்னே!

தாய்தகப்ப னில்லாராய்ச் சங்கமே கதியென்னச் சார்ந்துள் ளோரைத்
தாய்தகப்பன் புகலயானுத் தாங்குவேன் எனவேண்டித் தக்கோய்! நன்றே
ஆய்முகப்பி லமர்ந்திருந்து அணிமுகங்கொண் டுள்ளவரை அழைத்தன் போடே
ஏய்உகப்போ டின்னுணவை இனிதூட்டி மகிழ்வித்தாய்! எங்குற் றாயோ?

தக்காரைத் தகவிலரைத் தாமோரும் வகையெச்சச் சார்பா லென்னும்
மிக்கோனின் னுரைக்கிலக்கா விளங்குகின்ற மக்களுடன் மேவி யீண்டே
ஒக்கலெலாம் புகழவரு பெயரர்களுங் குறைவின்றி ஓங்க நன்றே
மிக்கபுகழ் படைத்தொளிர்ந்தோய்! விண்ணுலகம் இதிற்சிறப்போ?
[விண்ணுற்றாயே!

பொதுத்தொண்டிற் சிறுபிள்ளை பெற்றளித்த பேராள! புகற லென்னே
பொதுமன்ற நீதிபதி போற்றுமிவன் எனநினது புகழே விஞ்சப்
புதுமையுற நடுநின்று புகல்உலக நாதன்அணி புகழே மீட்டிப்
பொதுமையினி லிலங்கவிவன் பின்னோனாந் துரைராசன் பெற்றி யென்னே!

தஞ்சையினை ஆட்சிபுரி நகர்மன்ற உறுப்பினனாய்ச் சார்ந்து நின்று
விஞ்சுபுகழ் விளைத்தெமக்கு விறற்றலைவ னாகவிவண் விளங்கி நன்கு
கொஞ்சுகலை செறிகரந்தைக் கழகத்தின் தலைமைகொடு கோனே என்னத்
தஞ்சைவளர் கரந்தையுளார் துரைராசன் தலைவனெனச் சாற்ற உள்ளான்.

எஞ்சலிலாப் புகழ்கொண்டே இவண்விளங்கத் துரைராசன் இருந்தே எங்கச்
சஞ்சலத்தால் நின்மகனும் சண்முகசுந் தரப்பெயரோன் தனியே வாட
அஞ்சியிவண் முற்கூறும் அவ்உலக நாதனவன் அணைந்தே கூம்ப
விஞ்சுமுயர் நலம்படைத்தோய்! விண்ணுலகம் நீபுகுதல் வியப்பே யன்றோ!

பெற்றவுயர் தந்தையிலாப் பிள்ளைகளைப் புரத்தல்அறப் பெற்றி என்னச்
சுற்றமெலாம் எணச்சோம சுந்தரத்தைக் கண்ணெனவே சூழ்ந்து நன்கு
முற்றநலன் பெறவளர்த்தோய் முன்சுவாமி நாதனவன் முகமே வாடிச்
சுற்றவிவண் வேணவனுந் துயர்கூரப் பொன்றுடு துன்ன லாமோ?

இங்ஙனமார் சுற்றமெலாம் இருந்தேங்க முன்னாளில் இறைவன் றாளைத்
தங்குநல வீடாகத் தகுமுறையிற் கருதியுறுந் தக்கோ னாய
கொங்குமலி நலம்விளைத்த கோவிந்த சாமியினைக் குறிக்கொண் டேயோ
தங்குபுகழ் மருதப்பா சார்ந்தனைவிண் என்செய்வேம் சார்தல் நன்றோ!

மன்னுவிய வாண்டா வணித்திங்கள் ஆறுநாள்
துன்னுதிரு வாதிரைசேர் தூய்நாளில்—நன்னருயர்
வள்ளல் மருதப்பன் வையகநீத் தேயிறையை
உள்ளிக் கிலந்தா னுவந்து.

இங்ஙனம்,

கரந்தை,
6—9—'46.

கோ. சி. பெரியசாமிப் புலவர்,
கரந்தைப் புலவர் கல்லூரி ஆசிரியர்,
"தமிழ்ப் பொழில்" ஆசிரியர், க. த. சங்கம், தஞ்சை.

தமிழ் எங்கள் உயிர் என்பதாலே—வெல்லும்
தரமுண்டு தமிழருக் கிப்புவிமேலே. பாரதிதாசன்.

தமிழ்ப் பெரியோர்களே!
தமிழன்பர்களே !!
தமிழாசிரியர்களே !!!
ஒன்று கூடி ஆவன செய்ய முற்படுங்கள்.

# தமிழாசிரியர்களின் தாங்கொணாத் துயரங்கள்.

## மொழி நிலைமை.

**1.** (அ) தமிழ்ப் பாடங்களைப் பயிற்றுவதற்கு இப்போது உயர்நிலைப்பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் கொடுக்கப்பட்டிருக்கும் நேரம் போதவே போதாது. தமிழ் முதல் மொழியாக்கப்பட்டிருப்பதால் அதற்குரிய உரிமைகள் அனைத்தையும் உடனே கொடுக்கவேண்டும்.

(ஆ) இப்போது ஒவ்வொரு தமிழாசிரியரும் நூற்றறுபது (160) கட்டுரைப் புத்தகங்களுக்கு மேலாகவே திருத்தி வருகின்றனர். இச்சுமை தமிழாசிரியரின் உயர்ந்த குறிக்கோளையே குலைக்கின்றது என்பதை நாட்டு முன்னேற்றம் கருதும் எவரும் ஒத்துக்கொள்வர். ஒரு மாணவனின் கல்வித்திறமையை அறிய சிறந்த கருவியாக இருப்பது கட்டுரைப் பயிற்சியேயாகும். அதற்குக் குறைந்த அளவில் கட்டுரைப் புத்தகங்கள் இருந்தால்தான் மாணவரிடையே அத்திறமையை வளர்க்க முடியும். ஆகையால் இப்பெருஞ்சுமையைக் குறைக்க வேண்டும்.

## தேர்வுச் சலுகை.

**2.** (அ) தமிழ் மொழியில் புலவர் (வித்துவான்) பட்டம் பெறுகிறவர்களுக்கு உரிய பாடங்கள் ஆறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. தேர்வுக்குச் செல்வோர் ஒருமுறை ஒன்று அல்லது இரு பகுதிகளில் தேர்ச்சி பெறுவிட்டால் அவர் மறுமுறை தேர்வுக்குச் செல்லும்பொழுது, மீண்டும் ஆறு பகுதிகளையும் எழுதியே தீர வேண்டியிருக்கிறது. B. A., முதலிய தேர்வுக்குச் செல்வோர் தேர்வு பெறாத பகுதியை மட்டும் எழுதித் தேர்ச்சி பெறுகின்றனர். இவ்வுரிமையைத் தமிழ்ப் புலவர் தேர்வுக்குச் செல்லுவோருக்கும் அளித்தே தீரவேண்டும்.

(ஆ) B. A., முதலிய தேர்வுக்குச் செல்வோர் ஆண்டில் இருமுறை (மார்ச்சு, செப்டம்பர்) தேர்வு எழுதுவது போலத் தமிழ்ப் புலவர் தேர்வுக்குச் செல்வோருக்கும் ஆண்டில் இருமுறை தேர்வு எழுதும் உரிமையைத் தரல்வேண்டும்.

(இ) சென்னைப் பல்கலைக் கழகத்தார் நடத்தும் புலவர் (வித்துவான்) தேர்வுக்குத் தனிப்பட்ட முறையில் (Private) செல்லுவோருக்கு வயது முப்பதுக்கு (30) மேல் இருக்க வேண்டுமென்று உள்ள சட்டத்தினுல் பல வாலிபர்களும், சிறப்பாகப் பெண்களும் ஆர்வமுள்ள, தகுதியான பருவத்தில் புலமையடைய முடியாமற் போகிறது. ஆகையால் 30 வயது என்று குறிப்பிட்டுள்ள வரையறையை 20 வயது என்று குறைத்தல் மிகமிக இன்றியமையாத)தாகும்.

## குடவோலை (ஓட்டு) உரிமை.

3. பல்கலைக் கழகச் சிண்டிகேட் (Syndicate) செனேட் (Senate உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமை B. A., பட்டம் பெற்றவர்களுக்கு இருப்பதுபோலவே புலவர் பட்டம் பெறுவோருக்கும் குடவோலை (ஓட்டு) உரிமை இருக்கவேண்டும். இவ்வுரிமை தற்போது இல்லாதிருப்பது தமிழ் மொழியை இழிவுபடுத்துவதாகும். ஆகையால் இவ்வுரிமையை விரைவில் அளிக்க வேண்டும்.

## பாடப்புத்தகம் தேர்ந்தெடுக்கும் உரிமை.

4. (அ) தற்போதுள்ள பாடப்புத்தகத் தேர்ச்சிக் குழுவினர் (Text Book Committee) தேர்ந்தெடுக்கும் தமிழ்ப்பாடப் புத்தகங்களில் பற்பல குறைபாடுகள் வெளிப்படையாகக் காணக்கிடக்கின்றன. இக் குறைபாடுகளை உடனடியாக நீக்க, புலவர் பட்டம் பெற்றவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களையே அக் குழுவில் அமைக்க வேண்டும்.

(ஆ) தேர்ந்தெடுக்கப்படும் புத்தகங்களில் தமிழ் நாட்டு மன்னர்களின் ஆட்சித்திறன், போர்முறை, கொடைத்தன்மை, செந்தமிழ் வளர்த்த சீரிய பண்பு முதலியவற்றையும், வீரர்களின் திறமையையும், புலவரின் பரந்த குறிக்கோளையும், வள்ளல்களின் வள்ளன்மையையும், தமிழரின் நாகரிகத்தையும் அடிப்படையாகக்கொண்ட பாடங்கள் அமைதல் வேண்டும்.

## கண்காணிப்பு உரிமை

5. இப்போது அரசியலார் நடத்தும் (S. S. L. C.) சோதனைக்கு, அவ்வகுப்புக்குப் பாடம் கற்பிக்கத்தகுதியுள்ள மற்றைய ஆசிரியர்கள் கண்காணிப்பாளராகச் செல்லுவதுபோலவே தமிழாசிரியர்களுக்கும் அக் கண்காணிப்பு உரிமையை உடனே வழங்கவேண்டும்.

## ஆசிரியர்களுள் உயர்வு தாழ்வு

6. ஒரே தகுதி [புலவர் பட்டம்] பெற்ற தமிழாசிரியர்களிடையே மற்றெந்த ஆசிரியர்களிடையேயும் காணமுடியாத தலைமை (Senior) உதவி (Junior) என்று பிரித்து வைத்திருப்பது மிகமிகக் கேடானது. இப்பிரிவினையை வெகு விரைவில் போக்கவேண்டும்.

## விடைத்தாள் திருத்துதல்

*7.* கல்லூரி, உயர்நிலைப்பள்ளி ஆகிய இடங்களில் அரசியலார் நடத்தும் தேர்வு விடைத்தாள்களைத் [Answer Papers] திருத்தும் மற்றைய மொழி ஆசிரியர்கள் பெறும் அளவுத் தொகையைத் தமிழ் விடைத்தாள் திருத்தும் தமிழாசிரியர்களும் அடைய ஏற்பாடு செய்ய வேண்டும்.

## போதிய ஆசிரியரின்மை

*8.* தற்பொழுதுபோதுமான தமிழாசிரியர்கள் கல்லூரிகளிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும் இன்மைக்குக் காரணம் நாட்டில் தமிழ்க் கல்லூரிகள் மிகமிகக் குறைவாக இருப்பதும், கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர்களுக்கும், விரிவுரையாளர்களுக்கும், உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கும் இருக்கிற குறைந்த ஊதியமும் அவர்களைப் போற்றுமையுமே காரணமாகும்.

## ஊதியத்திட்டம்

*9.* கல்லூரிகளிலும், உயர்நிலைப்பள்ளிகளிலும் உள்ள தமிழாசிரியர்கள் பெற்றுவரும் ஊதியமானது, ஊதியம் என்று சொல்வதற்கே மிகமிக வெட்கக்கேடான நிலையிலிருக்கிறது. இந்த வெட்கக் கேடான நிலையிலுள்ள ஊதியத்திட்டத்தை அகற்றி முதல் மொழியாகிய தமிழ் மொழி ஆசிரியர்கள் (கல்லூரி, உயர்நிலைப்பள்ளி) அனைவர்க்கும் மற்றைய மொழி ஆசிரியர்களின் ஊதியத்தைவிட அதிகமான ஊதியம் கொடுக்கவேண்டும்.

*10.* அரசியலார், மாநாட்டாண்மைக் கழகம் முதலியவற்றில் உள்ள ஆசிரியர்கட்குக் கொடுக்கும் ஊதியம், பஞ்சப்படி இவைகளைப் போலவே, தனிப்பட்டவர்களால் நடத்தப்படும் உயர்நிலைப்பள்ளிகளிலும் கட்டாயம் கொடுக்க வேண்டுமென அரசாங்கம் உத்திரவு பிறப்பிக்க வேண்டும்.

நாமக்கல்,
*19—9—'46.*

இங்ஙனம்,
தமிழாசிரியர் கழகத்தார்.

---

குறிப்பு :— இதனைக் கண்ணுறும் தமிழ் நாட்டிலுள்ள தமிழாசிரியர்கள் அனைவரும் தத்தம் மாவட்டத்திலும் மாநாடுகள் கூட்டி நமது பெருங் குறைபாடுகளை அரசியலாருக்கு எடுத்துக்கூறி நம் உரிமைகளைப் பெறவேண்டுமாறு கோரப்படுகிறது.

# வேண்டுகோள் !

திரு. வ. சுப்பையா பிள்ளை, அவர்கள்.
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,
6, பவழக்காரத்தெரு, சென்னை.

இப்போது சில ஆண்டுகளாக உயர்நிலைப் பள்ளிகளில், கணக்கு, பூகோளம், வரலாறு, அறிவுநூல், முதலியன தாய் மொழியில் சொல்லிக் கொடுக்கப்பட்டு வருவது தாங்கள் அறிந்ததே. அதன் பொருட்டுச் சென்னை அரசினர் முதன்முதல் கலைச்சொற் பட்டி ஒன்று எழுதி அச்சிட்டு வெளிப்படுத்தினர். அப் பட்டியிலுள்ள சொற்க ளெல்லாம் நூற்றுக்கு 90-க்கு மேல் சமஸ்கிருதச் சொற்களாகவும், நீண்ட தொடர்களாகவும், எடுத்தாளுதற்கு இயல்பில்லாதனவாகவும் அமைந்துள்ளன. எனவே சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தார் உயர்திரு. C. இராசகோபாலாச்சாரியார், விபுலானந்த அடிகள் முதலியோர் உள்ளிட்ட அறிஞர் குழு ஒன்றை அமைத்துக் கலைச் சொற்கள் என்ற தலைப்பில் 1938-ல் ஒரு நூலை வெளிப்படுத்தினர். அதன்கண் அடங்கிய சொற்கள் தனித் தமிழாகவும் சுருக்கத் தொடர் களாகவும் எடுத்தாளுதற்கு எளிமையாகவும் உள்ளன. பாட நூல் களில் அவற்றை எடுத்தாளுமாறு உயர்திரு. C. இராசகோபாலாச் சாரியாரை முதல் அமைச்சராகக் கொண்ட அரசினர் ஆணை வெளி யிட்டனர், காங்கிரஸ் அமைச்சர்கள் வெளியேறி மதி உரைஞர் (Adviser) ஆட்சியில் தமிழ்ப் பகைவர் சிலர் கலைச் சொற்கள் தனித் தமிழிலிருப்பதைக் கண்டு மனம் புழுங்கிக் காலஞ் சென்ற கனம் சீனிவாசசாஸ்திரியாரைத் தலைவராகக்கொண்டு அரசினர் வழி வேறொரு கலைச் சொற்பட்டி ஆக்குவதற்கு ஒரு புதிய குழு ஒன்றை அமைத்தனர். அதன் வழி இப்போது தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், உருது ஆகிய ஐந்து மொழிகளுக்கும் கலைச் சொற்பட்டி எழுதி அச்சிடப்பெற்று வெளிவரும் நிலையிலிருக்கின்றது. உயர்திரு கல்வி அமைச்சர் அவிநாசிலிங்கம் செட்டியார் அவர்கள், திருவாளர், ரா. பி. சேதுப் பிள்ளை பி. ஏ. பி. எல். அ. முத்தையா, எம். ஏ. முதலியோரை அப்புதிய கலைச் சொற்பட்டியைப் பார்த்து அவர்கள் கருத்தைத் தமக்குத் தெரிவிக்குமாறு கேட்டிருக்கின்றார்கள். இப் போது வெளி வந்திருக்கின்ற கலைச்சொற் பட்டியில் பல குறைகள் காணப்படுகின்றன. ஓர் ஆங்கிலச் சொல்லுக்குத் தனி சமஸ்கிருதச் சொல்லாகவும், தமிழ்ச் சொல்லாகவும், போட்டிருக்கிறார்கள். அதாவது யூனிவர்சிட்டி (University) என்பதற்கு 'சர்வ கலாசாலை' 'பல்கலைக் கழகம்' என்ற இரண்டு சொற்களைப் போட்டிருக்கிறார்கள். (Self Government) என்றதற்கு 'தன்னாட்சி' என்பதற்குப் பதிலாகச் 'சுய ராஜ்யம்' 'சுய ஆட்சி' என்றும் போட்டிருக்கிறார்கள். சில சொற்களுக்கு ஆங்கிலச் சொல்லை அப்படியே தமிழ் வடிவமாக

அமைத்துப் புதிய தமிழ்ச்சொல் ஒன்று சேர்த்தும் இருக்கின்றனர்கள். அதாவது (Hygrometer) என்ற சொல்லுக்கு (ஹைகிரோமீட்டர்) ஈரமானி என்றும் (Hydraulic) என்பதற்கு 'ஹைடிராலிக்' 'நீரியல்' என்றும் வெளியிட்டிருக்கிறார்கள். மேலும் பல சொற்களுக்கு மொழியியல் அறியாமலே சொற்கள் ஆக்கப்பட்டிருக்கின்றன. அஃதாவது Ad. Infinitum என்ற சொல்லுக்கு முடிவின்மை, என்பதற்குப் பதிலாக 'முடிவின்றி' என்று போட்டிருக்கின்றனர். இது போலப் பல தவறுகள் காணப்படுகின்றன. எனவே இப்புதிய பட்டியிலுள்ள சொற்கள் ஆட்சிக்கு வருமானால் தமிழ் மொழி நிலை குலையும் என்பது கண்கூடாகும். ஆதலால் திருவாளர் ரா. பி. சேதுப் பிள்ளை, இராவ்பகதூர், C. M. இராமச்சந்திரன் செட்டியார், திருவாட்டி E.T. இராஜேஸ்வரியம்மையார், வித்துவான், தெ.பொ. மீனாட்சி சுந்தரம் பிள்ளை, வித்துவான், மு. வரதராஜனார் M. O. L., A. இராமசாமி கவுண்டர் M. A., புலவர், ஞா, தேவநேயப் பாவாணர், டாக்டர், அ. சிதம்பரநாதஞ் செட்டியார் M. A., அ. முத்தையா M. A., வித்துவான், ஔவை, சு. துரைசாமிபிள்ளை, வித்துவான், மு. இராசாக்கண்ணு B. O. L., (Hons), வித்துவான் S. ஆறுமுக முதலியார் M. A., B. O. L., இராமகிருஷ்ண மடம் சீனிவாசாச்சாரியார், M. S. சபேச ஐயர், சாமி. வேலாயுதம் பிள்ளை, A. S. கணபதியா பிள்ளை, M. A., T. P. நவநீதகிருஷ்ணன் M A., R. K. விஸ்வநாதம் M. A., இவர்கள் முதலியோரைக் கொண்ட ஒரு புதிய குழுவை ஏற்படுத்தி இப்போது வெளிவர விருக்கும் புதிய கலைச்சொற் பட்டியைத் திருத்தஞ் செய்து வெளிப்படுத்துமாறு கல்வி அமைச்சர் உயர்திரு. T. S. அவிநாசிலிங்கம் செட்டியார் அவர்களுக்கு உடனே எழுதும்படி கேட்டுக்கொள்கிறேன். இது காலத்தினால் தமிழ் மொழிக்குச் செய்ய வேண்டிய சிறந்த பணியாகும். திரு. கல்வி அமைச்சர் அவர்கள் தமிழுக்கு விரைந்து பல தொண்டுகள் செய்ய வேண்டும் என்பதில் முனைந்து வருவதைத் தாங்கள் அறிவீர்கள். புதிய கலைச்சொற் பட்டியைப்பற்றி வெளியே எதிர்ப்பு வன்மையாக இருக்கிறதென்று அவர்கள் அறிந்தால் அதனைத் திருத்தாமல் வெளியிடமாட்டார்கள். ஆகவே தங்கள் கருத்தெதிர்ப்பினை உடனே அவர்களுக்குத் தெரிவித்தல் வேண்டும். அவ்வாறு தெரிவித்ததை எனக்குந் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

# நம்பியாண்டார் நம்பியும் ஞானசம்பந்தரும்.

திருவாளர். வித்துவான். ஔவை. சு. துரைசாமி பிள்ளை,
தமிழ்விரிவுரையாளர், அண்ணாமலைப்பல்கலைக்கழகம்,
அண்ணாமலைநகர்.

(முற்றொடர்ச்சி: துணர் உஉ, மலர் ருா, பக்கம் 146)

ஆளுடையார் திருத்தொகையில், இப்பதிகங்களைப்பற்றிக் கூற லுற்ற நம்பியாண்டார் நம்பிகள், "கத்தித் திரிபிறவிச் சாகரத்துள் ஆழாமே, பத்தித் தனித்தெப்பம் பார்வாழத் தந்தபிரான்" என்று உரைத்துப்பின்னர்,

> பதிகப்பெருவழி காட்டப் பருப்பதக் கோன்பயந்த
> மதியத் திருநுதல் பங்கன் அருள்பெற வைத்த எங்கள்
> நிதியைப் பிரமாபுரநகர் மன்னனை என்னுடைய
> கதியைக் கருதவல்லோர் அமராவதி காப்பவரே"

என்றும்,

> "தேறும் புனல்தில்லைச் சிற்றம்பலத்துச் சிறந்துவந்துள்
> ஊறும் அமிர்தப் பருகிட்டெழுவதோர் உட்களிப்புக்
> கூறும் வழிமொழி தந்தெனை வாழ்வித்தவன் கொழுந்தேன்
> நாறும் அலங்கல் தமிழாகரன் என்னும் நன்னிதியே,"

என்றும் திருச்சண்பை விருத்தத்தில்,

> "ஆறதேறுஞ் சடையானருள் மேவ அவனியர்க்கு
> வீறதேறும் தமிழால் வழி கண்டவன்"

என்றும் கூறியுள்ளார்.

இனி, ஞானசம்பந்தர் அருளிய திருப்பதிகத்தை ஓதும்போது திருநனிபள்ளித் திருப்பதிகத் திருக்கடைக்காப்பில்' "இடுபறை ஒன்ற அத்தர் பியல் மேலிருந்து இன் இசையால் உரைத்த பனுவல், நடு விருள் ஆடுமெந்தை நனிபள்ளியுள்க வினை கெடுதல் ஆணை நமதே" என்றும், கோளறுபதிகத் திருக்கடைக்காப்பில், "தானுறு கோளும் நாளும் அடியாரை வந்து நலியாத வண்ணம் உரைசெய், ஆனசொல் மாலையோதும் அடியார்கள் வானில் அரசாள்வர் ஆணை நமதே" என்றும் அருளுவதைக் காணுந்தோறும் நமக்கு வியப்பும் இறும்பூதும் உண்டாகின்றனவன்றோ?

நனி பள்ளிக்குப் போம்போது ஞானசம்பந்தர், "நாம் அத்தன் பியன்மேல் இருந்து இன்னிசையால் உரைத்த பாசுரம் பத்தும் ஓது பவர் வினைகெடுவர்; அதற்கு நமது ஆணை"யென்பது காணும்போது, "இச்சிறுபிள்ளை தன் தந்தை தோளில் இருந்துகொண்டு சொல்லும் இறுமாப்பு என்னே" என்றெழும் நினைவை நம் சேக்கிழார்பெருமான் உடனே நம்மைத் தெருட்டிப் பணிவிக்கின்றார். தந்தை தோள்மேல் இருந்தார் என்றது பரமன் திருவடிக் கீழ் இருந்தார் என்பதை யுணர்த்தும்; திருவடிக் கீழ் எனவே, அவர் திருமுடிமேல் பரமன்

திருவடியிருப்பது பெறப்படும். படவே, அவர் மனத்தே தம்முடியில் பரன் திருவடியிருப்பது கருதி நிற்கின்றாராம்; சேக்கிழார், "மாதவம் செய்தாதையார் வந்தெடுத்துத் தோளின்மேல் வைத்துக்கொள்ள, நாதர்கழல் தம்முடிமேல் கொண்ட கருத்துடன் போந்தார் ஞான முண்டார்" (ஞானசம். பு. 113) என்றும், திருநனிபள்ளி திருப்பதிகத் திருக்கடைக்காப்பில் "ஆணை நமதே" என்றதை வியந்து, "நாரியோர் பாகர் வைகும் நனிபள்ளியுள்குவார்தம், பேரிடர் கெடுதற்காணை நம தெனும் பெருமைவைத்தார்" (திருஞான. பு. 115) என்றும் உரைக்கின்றார்.

இவ்வாறு "ஆணைநமதே" என்னும் பெருமை மொழியை நன்கு கண்டு இறும்பூதெய்திய நம்பியாண்டார், திருத்தொகையில், "முத்திப் பகவன் முதல்வன் திருவடியை, "அத்திக்கும் பத்தர் எதிர் ஆணை நமதென்னவலான்" என்று பாராட்டியுரைக்கின்றார்.

இங்ஙனம் அடியாரைப் பற்றும் வினைகளைக் கெடுத்தற்கும் கோள் முதலியவற்றால் எய்தும் தீமை கெடுதற்கும் ஆணையிட்டுக் கூறும் பெருமை படைத்த ஞானசம்பந்தப் பெருந்தகையாரை வழிபடுவதும் சிவ வழிபாடே என்றும், அதனாற் பெறும் பயனும் சிவபோகமே என்றும் நம்பியாண்டார் நம்பி கூறுகின்றார். அப்பகுதியைத் தொடங்குவதற்கு முன் அகத்திணை நெறியில் அவரை நம்பிகள் பாடியிருக்கும் திறம் சிறிது கூறுகின்றாம்.

ஞானசம்பந்தரைப் பாராட்டி நம்பியாண்டார் நம்பிகள் பாடிய புகழ் நூல்களில் பெரும்பான்மையான பாட்டுகள் அகத்திணை ஏழிலும் விரவி யிருக்கின்றன. அவற்றை, திணையும் துறையுமாக வகுத்து ஆராய்தற்குக் காலம் இன்மையின் இரண்டொன்றே காட்ட முயல்கின்றோம்.

ஒருத்தி ஒரு தலைமகனைக் கண்டு அவன் நட்புப் பெற்றுக் களவொழுக்கம் பூண்டு ஒழுகுகின்றாள். அவள் அவனை இடையறாது கூடி யிருப்பதற்கு இயலாமையால் மேனி வேறுபடுகின்றாள். அவ் வேறுபாடு புறத்தார்க்குப் புலனாகிறது. அதனை அவள் தோழிக்குக் குறிப்பிக்க, அவள் செவிலிக்குத் தலைவிக்கும் தலைவனுக்கும் உண்டான தொடர்பினை உரைக்கின்றாள். இது களவொழுக்கத்தில் அறத்தொடு நிலையென்று வழங்கும். தலைவி புனத்தே இருக்குங்கால் யானையொன்று போந்து அச்சுறுத்துகிறது. அது கண்டு தலைவி அலமருகின்றாள்; அப்போது தலைமகன் போந்து அவ் யானையை வெருட்டி யோட்டி அவளைக் காக்கின்றான். அந்நன்றி மறவாமல் அவள் அவன்பால் அன்புற்று மெலிகின்றாள் என்ற இக் கருத்தை, அத் தோழி உரைக்கத் தொடங்கி,

"மன்னங்கனை செந்தமிழாகரன் வெற்பில் வந்தொருவர்
அன்னங்கள் அஞ்சன்மின்என்று, அவ்வேழத் திடைவிலங்கிப்
பொன்அங்கு அலைசாவகை எடுத்தாற்கு இவள்பூண் அழுந்தி
இன்னந் தழும்புளவாம் பெரும்பாலும் அவ்வேந்தலுக்கே"

என்று உரைக்கின்றாள். இவ்வாறு அகனைந்திணை யொழுக்கமே பற்றி வருவன பல.

மகளைப் பேதுறுவித்தான் என நற்றாய் ஏசல் என்ற துறையில் நம்பியாண்டார் நம்பிகள் ஞானசம்பந்தப் பெருந்தகையைப் பிள்ளை யென்ற நிலையில் வைத்து அழகிய பாட்டொன்றைப் பாடுகின்றார்.

தனமலி கமலத் திருவெனும் செல்வி
விருப்பொடுந் திளைக்கும் வீயா இன்பத்து
ஆடக மாடம் நீடு தென்புகலிக்
காமரு கவினார் கவுணியர் தலைவ
பொற்பமர் தோள, நற்றமிழ் விரக,
மலைமகள் புதல்வ, கலைபயில் நாவ,
நினது, பொங்கொளி மார்பில் தங்கியதிருநீறு
ஆதரித் திறைஞ்சிய பேதையர் கையில்
வெள்வளை வாங்கிச் செம்பொன் கொடுத்தலின்
பிள்ளையாவது தெரிந்தது பிறர்க்கே'' (கோவை. 10)

இதன்கண், "வெள்வளைவாங்கி" என்றது உடம்புநனி சுருங்கல்; "செம்பொன் கொடுத்தல்" என்றது பசலை பாய்தல். பிள்ளைகளன் றிப் பெரியோர் வெள்வளைக்கு மாறாகச் செம்பொன் தாரார் என்ப தும், பேதையர்க்குச் செம்பொன்னைத் தெரிந்தவர் கொடார்; சிறு பிள்ளைகள் அப்பொன்னின் அருமை தெரியாராதலின், அவர் தான் கொடுப்பர். நீ இவற்றைச் செய்தனையாதலின், "பிள்ளையாவது தெரிந்தது பிறர்க்கென்னார்" பிறர்க்கு என்றவிடத்து எச்சவும்மை தொக்கதாகக் கொள்ளின், எனக்கேயன்றிப் பிறர்க்கும் இது நன்கு தெரிந்துவிட்டது என்றுளாம். "பிள்ளையாவது தெரிந்தது பிறர்க்கே" என்றதன்கண், "பிறரெல்லாம் இவ்வாறு காரணம் காட்டிப் பிள்ளை யென நின்னை யேசுகின்றனர்; யான் நீ பெரியன் என்றே பேணிப் பரவுகின்றேன்; நீ நின் மார்பின் மாலையைத்தந்து என் மகள்கொண்ட பேதுறவையைத் தீர்த்தருளவேண்டும்" எனத்தாய்தார் வேண்டிநிற் கும் நிலையும் தோற்றுவிக்கும் நயம் காண்மின்.

ஞானசம்பந்தர்பால் உண்டான காதல் வேட்கையால் கண் ணுறக்கமின்றிக் கைவளை சோர்ந்து மேனி வேறுபட்டு இருக்கும் ஒருத்தியைத் தோழி, நெருங்கி எத்துணை வேறுபாடு எய்தினும் இவ் வாறு கைவளை சோர நிற்றல் நன்றன்று என்றுகூற, அவட்கு விடை யிறுக்கும் அத்தலைவி,

"ஊரும் பசும்புரவித் தேரொளித்த தொளிவிசும்பில்
கூரும் இருளொடு கோழிகண் துஞ்சா கொடுவினையேற்கு
ஆரும் உணர்ந்திலர், ஞானசம்பந்தன் அம் தாமரையின்
தாரும்தருகிலன் எங்ஙனம்யான் சங்கு தாங்குவதே" (கோவை24)

என்று கூறுகின்றாள். இதன்கண் இரவு முழுதும் அவள் கண் ணுறக்கமின்றி யிருந்த குறிப்பை, தேர்ஒளித்தது, இருள் கூர்ந்தது, கோழி கூவிற்று என அந்திமாலையும், நடுவியாமமும் விடியற்காலமும் அக்கால நிகழ்ச்சி வாயிலாக உணர்த்துமாற்றால் தோற்றுவிக் கின்றாள். என்னோடு இருக்கும் தோழியாகிய நீ நன்கு உறங்கினை; என் கலக்கத்தை அறிந்திலை யென்பாள், "ஆரும் உணர்ந்திலர்" என

முன்னிலைப் புறமொழியாகப் புகல்கின்ருள். இனி, இதனல் வேறு ஒரு கருத்தும் குறிக்கின்ருள். என் கைவளை சோர்வது கண்டுநெருங்கி யுரைக்கும் நீ, அச்சோர்வுக்கு ஏது வினையுணர்ந்து ஞானசம்பந்தன் பால் சென்று தார்பெற்றுவர முயல்கின்றிலை யென்றற்கு, "ஆரும் உணர்ந்திலர்" என்கின்ருள். மேலும், இதனல், தாயர் முதலாயினர் இவட்குற்ற வேறுபாட்டினை நன்கு ஓராது வெறியயர்தலும், கட்டுக் காண்பதும் பிறவும் வீணே செய்கின்றனர் என்பதும் பெறப்படும். உங்கள் உணர்வின்மையைக் கண்டு, அந்த ஞானசம்பந்தனுகிலும், வந்து கூடுதல் நினையானுயினும், தன் மாலையாயினும் தருகின்ருனே எனினும் அது தானும் இல்லை; அதனல் யான் சோர்ந்து மெலியாது ஆற்றியிருப்பது எவ்வாறு முடியும் என்பாள், "எங்ஙனம் யான் சங்கு தாங்குவதே" என்கின்ருள்.

தோழியின் துணைபெற்றுத் தலைவியொடு கூடியொழுகும் தலைமகனைச் சேட்படுக்கலுற்ற தோழி, அவனை, "பகற்போது மறைந்தது; இங்கு நில்லற்க" என்று கூறுபவள், ஞானசம்பந்தப் பிள்ளையார் சிவ பரம்பொருளின் திருமுன்நின்று அருள்பெறும் திறத்தை அழகு திகழக் கூறுகின்ருள்:

"சிறுபரல் கலித்த விளிகுரல் கிண்கிணி
சேவடி புல்லிச் சிறுகுரல் பயிற்றி
அமுதுண் செவ்வாய் அருவி தூங்கத்
தாளம் பிரியாத் தடக்கை யசைத்துச்
சிறுகூத் தியற்றிச் சிவனருள் பெற்ற
நற்றமிழ் விரகன் பற்ற லர்போல
இடுங்கிய மனத்தொடும் ஒடுங்கிய சென்று
பரிதியும் குடகடற் பாய்ந் தனன்
கருதி நிற்பது பிழைகங்குல் இப்புனத்தே" (கோவை, 19)

இதன்கண் ஞானசம்பந்தப் பிள்ளையார் பாதத்திற் கட்டிய கிண்கிணி சிறு குரல் மிழற்ற, திருவாயில் அமுதூற நின்று திருப்பதிகம் பாட திருக்கை அதற்கேற்பத் தாளம் போட, தம்மை மறந்து சிவனருளில் தோய்ந்து நிற்றலின் திருவடி அடி பெயர்த்துச் சிறு கூத்தாடத் தோன்றும் இன்பக் காட்சி நம் கண் முன் தோன்றுவது காண்மின்.

இவருடைய பாட்டுக்களில் அகப்பொருட்டுறையில் இதுகாறும் எப்புலவராலும் காட்டப்படாத புதுப்புதுத் துறைகளும் கருத்துக் களும் பல்கியிருக்கின்றன. அவற்றை யெல்லாம் ஈண்டெடுத்துக் காட்டுவது வேண்டா கூறலாம். இவர் பாட்டுக்களை மட்டில் தனியே எடுத்து ஆராய்ந்து காண விரும்புவோர்க்கு அவை பொருளாம்.

இனி, நம்பியாண்டார் நம்பிகள் ஞானசம்பந்தப் பெருமானைத் தனித்த முறையில் எடுத்தோதி நமக்கு அறிவுறுத்துவனவற்றைச் சிறிது கூறி என் சிற்றுரையை முடித்துக் கொள்ளுகின்றேன்.

முதற்கண், ஞானசம்பந்தப் பெருந்தகையின் திருநாமத்தை ஓதுவதே வேண்டுவ தென்கின்ருர். ஒருவன் பெற விரும்பும் பேறுகள் அனைத்தையும் பெறுதற்கு அதுவே வழி யென்பார்,

"உறவும்பொருளும் ஒண்போகமும் கல்வியும் கல்வியுற்ற
துறவும் துறவிப்பயனும் எனக்குச் சுழிந்தபுனல்
புறவும்பொழிலும் பொழில்சூழ் பொதும்பும் ததும்பும்வண்டின்
நறவும் பொழில்எழில் காழியர்கோன் திருநாமங்களே"

என்று கூறுகின்றார். பிறிதோரிடத்தில் இக் கருத்தைச் சிறிது மாற்றி,

"எனவே இடரகலும் இன்பமே எய்தும்
நனவே அரனருளை நாடும்—புனல்மேய
செங்கமலத் தண்தார்த் திருஞான சம்பந்தன்
கொங்கமலத் தண்காழிக் கோ"

என்று நமக்கு அறிவுறுத்துகின்றார். ஆகவே ஞானசம்பந்தர் என்ற திருப்பெயர் ஓதினார்க்கு உயர்நலம் பெறுவிக்கும் உறுதியுடைய தென்பது வற்புறுத்தினாராயிற்று.

இனி, ஞானசம்பந்தப் பெருந்தகையின் திருவடியை அனைவரும் பரவிப் பணியவேண்டும் என்பார் அவற்றின் பெருமையைப் பல விடங்களில் பாராட்டிக் கூறுகின்றார். நினைவார் நினைவில் எழுந்தருளி இன்பத்தேன் பெருகுவது அவர் திருவடியின் மாண்பு என்பார்.

"என்றும் அடியவர் உள்ளத்திருப்பன, இவ்வுலகோர்
நன்று மலர்கொடு தூவித்துதிப்பன, நல்லசங்கத்து
ஒன்றும் புலவர்கள் யாப்புக்குரியன, ஒண்கவியைப்
பொன்றுங் கவுணியன் சைவசிகாமணி பொன்னடியே"

என்று திருமும்மணிக் கோவையிலும்,

"கவிக்குத் தகுவன, கண்ணுக்கினியன, கேட்கில்இன்பம்
செவிக்குத் தகுவன, சிந்தைக்குரியன, பைந்தரள
நவிக்கண் சிறுமியர் முற்றில்முகந்துதம் சிற்றில்தொறும்
குவிக்கத் திரைபரக்கும் கொச்சைநாதன் குரைகழலே"

என்று திருவந்தாதியிலும் பாராட்டி யிருக்கின்றனர். இவ்விரண்டு பாட்டுக்களிலும் ஞானசம்பந்தர் திருவடி சிந்தித்தற் குரியனவாம் என்று வற்புறுத்துகின்றாரன்றோ? சிந்திப்பதால் உண்டாகும் பயனே ஞானப்பேறு என்று சேக்கிழார் பெருமான் தெரிவிக்கின்றார். வாழ்க அந்தணர் என்றுதொடங்கும் திருப்பாசுரத்துக்கு அவர் பேருரை விரித்து அதன் முடிவில், அப்பேருரையினைத் தாம் எழுதுதற்குத் துணைசெய்தது எந்தை ஞானசம்பந்தப் பெருந்தகையின் திருவடி ஞானமே என்பார், "வெறியார் பொழிற் சண்பையர் வேந்தர் மெய்ப் பாசுரத்தைக், குறியேறிய எல்லை அறிந்து கும்பிட்டேனல்லேன்; சிறியேன் அறிவுக்கு அவர்தம் திருப்பாதம்தந்த, நெறியே சிறிதுயான் அறிநீர்மை கும்பிட்டேனன்பால்" என்று ஓதுகின்றார். ஞானசம்பந்தப் பெருந்தகையின் திருவடிப்பேறு ஞானப் பேறே என யாப்புறுத்தற்கு இதன்கண், அவர்தம் திருப்பாதம் தந்த நெறியென்று சேக்கிழார் பெருமான் கூறுகின்றார். சிவப்பிரகாச சுவாமிகளும் இத்திருவடிப் பேறு வீடு பேறே என்பார். "பூவான்மலிமணி நீர்ப்பொய்கைக் கரையினியல், பாவான்மலி ஞானப் பாலுண்டு, நாவான், மறித்தெஞ் செவியமுதா வார்த்த பிரான் தண்டை, வெறித் தண் கமலமே வீடு" என்று ஓதியிருத்தலை நாம் நன்கு அறிகின்றோம்.

ஞானசம்பந்தர் திருவடி பணிவார் பெறும்பயன் ஞானமும்வீடும் என மேலே காட்டிய பெருமக்கள் வழங்கிய நல்லுரையால் தெளிந்தோமாயினும் நம்பியாண்டார் கூறுவது காண்போம். அவரும் திருவடிப்பேறு சிவபோகப் பேறே என்பார்,

" பெறுவதுநிச்சயம், அஞ்சல்நெஞ்சே, பிரமாபுரத்து
மறுவறு பொற்கழல் ஞானசம்பந்தனை வாழ்த்துவதால்
வெறியுறு கொன்றைமறியுறு செங்கை விடையெடுத்த
பொறியுறு பொற்கொடி எம்பெருமான் அமர்பொன்னுலகே"

என்று அழுத்தமும் திருத்தமும் பொருந்தக் கூறுகின்றார். சிவபோகம் பெறுதல் எளிதன்றே; திருஞானசம்பந்தர் திருவடி வழிபாடு அதனைத் தருமென மிக எளிதாகக் கூறுகின்றீரேயெனின், "எளிது எளிதே" எனவற்புறுத்துவாராய், பிறிதோரிடத்தில்,

" முத்தன வெண்ணகையார் மயல்மாற்றி முறைவழுவாது
எத்தனைகாலம் நின்றேத்தும் அவரினும் என்பணிந்த
பித்தனை எங்கள்பிரானை அணைவது எளிதுகண்டீர்,
அத்தனை ஞானசம்பந்தனைப் பாதம் அடைந்தவர்க்கே"

என்று உரைக்கின்றார். இதனைக் கேட்டதும், நம்மனோர் மனத்தில், "அஃது எவ்வாறு இயலும்; ஞானசம்பந்தர்க்கு அடியோம் என்பதனுல் சிவபோகப் பேறு எய்தும் என்பது எங்ஙனம் அமையும்?" என்றெல்லாம் எண்ணம் எழுகிறது. அதற்கும் நம்பியாண்டார் நம்பி நல்ல காரணம் கூறுவார்,

" சுரபுரத்தார்தம் துயருக் கிரங்கிச் சுரர்கள்தங்கள்
பரபுரத்தார் தம்துயர்கண்டருளும் பரமன்மன்னும்
அரபுரத்தானடி எய்துவன்என்பது அவனடிசேர்
சிரபுரத்தான் அடியார் அடியான்எனும் திண்ணனவே"

என்று கூறுகின்றார். இவ்வாறு எடுத்து மொழிந்தவர், இதற்குத் தக்க எடுத்துக் காட்டும் ஓதுகின்றார். எடுத்துக் காட்டும் அளவை வகைகளுள் ஒன்று.

அது,

" காரங்கணைபொழில் காழிக்கவுணியர் தீபன்நல்லூர்ச்
சீரங்கணை நல்பெருமணந் தன்னில் சிவபுரத்து
வாரங்கணை கொங்கை மாதொடும்புக் குறும்போதுவந்தார்
ஆரங்கொழிந்தனர் பெற்றதல்லாலவ் வரும்பதமே"

என்பது.

இதனைக் கேட்குமவர் நெஞ்சில் தாமும் ஞானசம்பந்தர் திருவடி பரவி அப்பேரின்ப வாழ்வு பெறுதற்கு முயலவேண்டும் என்ற வேட்கைகொள்வர்; நினைத்தலும் செய்வர். அந்நினைவு நெடிது செல்லாது இடையற்றுப் போதலும் உண்டு. அப்போது, தம்மை, நினையவொட்டாது தடுப்பது வினையென்னும் உணர்வுதோன்றி அவர் உள்ளத்தை

அலைக்கும். அதனால் அவர் மனம் கலங்குவர். அக்கலக்கமறிந்தே, நம்பியாண்டார் நம்பிகள், உங்கள் முயற்சியை முன்னை வினைப்பயன் போந்து இடையூறு செய்து கெடுப்பதாக எண்ணுகின்றீர்கள்; ஞான சம்பந்தன் திருவடி வழிபாடு அவ்வினைப் பகையைச் சிதைக்கும்; நீவிர் கவலுதல் வேண்டா" என்பாராய்,

" நலமலி தரும்புவனி நிறைசெய்புகழ் இன்பம்நனி
பனிமதியணிந்த பொழில்சூழ்
பொலமதில் இரும்புகலி அதிபதி விதம்பெருகு
புனிதகுணன் எந்தம்இறைவன்
பலமலி தருந்தமிழின் வடகலை விடங்கன்மிகு
பரசமய வென்றியரிதன்
சலமலி தருங்கமல சரண்நினைவன் என்றனது
தகுவினைகள் பொன்றும் வகையே"

என்று ஓதி வினைப்பகையைக் கெடுத்தற்கு விரகு கூறித் தெருட்டு கின்றார்.

இவ்வாறு, திருஞான சம்பந்தப் பெருந்தகையின் திருவடிநினைந்து வழிபடும்நெறியில் நம்மை அறிவுறுத்திக் கூட்டுவிக்கும் இச்சான்றோர் இவ்வகையால் அடியராயினர் பெருமை இது எனப் பல பாசுரங் களின் வாயிலாகத் தெரிவிக்கின்றார். ஒன்று காட்டுதும்.

"மேனாட் டமரர்தொழ விருப்பாரும் வினைப்பயன்கள்
தாநாட் டருக்ரகில் தளர்வாரும் தமிழர்தங்கள்
கோனாட்டருகர் குழாம்வென்ற கொச்சையர் கோன்கமலப்
பூநாட்டடி பணிந்தாரும் அல்லாத புலையருமே"

என்பது காண்க. இதன்கண் அடிபணியும் பெரியோர் பேரின்ப வாழ்வில் இனிதிருப்பரென்பதும், பணியாதார் நரகில் தளர்வரென் பதும் கூறி, பணியாதவரைப் புலையரென்று இழித்துரைப்பதும் காண்க.

இந்நிலையில் திருமாலும் அயனும் சிவபரம்பொருளின் திருவடியும் திருமுடியும் முறையே காண முயன்று அலமந்த செய்தியை நினைந்து, அவர் தாமும், நம் ஞானசம்பந்தர் திருவருளை நாடியிருப்பின், அவர் கட்கு அவர் அவற்றைக் காட்டியிருப்பாரென்பார்,

"நிலமேறிய மருப்பின் திருமாலும் நிலம்படைத்த
குலமேறிய மலர்க் கோகனத் தயனும்கொழிக்கும்
சலமேறிய முடிதாள் கண்டிலர் தந்தைகாணஅன்று
நலமேறிய புகழ்ச்சம்பந்தன் காட்டிய நாதனையே"

என்று கூறுகின்றார்.

இவ்வாறு மாலும் அயனும் காண்பதற்கரிய பரமனைத் தாம் எளிதிற்கண்டு, அதனோடமையாது தந்தைக்கும் காட்டியருளிய அருளாளரான ஞானசம்பந்தப் பெருந்தகையைத் தாம் எளிதில் பற்றிப் பரவுதற்கு நேர்ந்த நேர் பாட்டினைத் தாமே வியந்து,

"செப்பியஎன்ன தவமுயன்றேன் நல்ல செந்தமிழால்
ஒப்புடை மாலைத் தமிழாகரனை உணர்வுடையோர்
கற்புடை வாய்மொழி யேத்தும்படி கதறிட்டிவர
மற்படு தொல்லைக் கடல்புடைசூழ்தரு மண்ணிடையே"

என்று பாடி மகிழ்கின்றார். இம்மகிழ்ச்சி மிகுதியால், இனி ஞானசம்பந்தரை யன்றிப் பிறரைப் பாடுதற்கு என் மனம் செல்லாது; ஆனைமேல் அம்பாரி கட்டிச் செல்லும் அரிய செல்வம் சிறந்த வாழ்வு தானே வந்தமைவதாயினும் அதனை வேண்டேன் என்று கூறுவாராய்,

உகட்டித்து மோட்டு வராலினம் மேதி முலையுரிஞ்ச
அகட்டிற் சொரிபால் தடங்நிறை கொச்சை வயத்தரசை
தகட்டில் திகழ்மணிப் பூண்டமிழாகரன் றன்னையல்லால்
பகட்டிற் பொலியினும் வேண்டேன் ஒருவரைப் பாடுதலே"

என்று கூறுகின்றார்.

இவ்வண்ணம் ஞானசம்பந்தர்பால் திண்ணிய அன்பராகுமிவர், இப்பாட்டின்கண் ஒருவரை யென்றது, சிவனடியாரல்லாத பிறர் ஒருவரையாகும் எனக்கொள்ளல் வேண்டும்; என்னை, திருநாவுக்கரசரைத் திருவேகாதசமாலை பாடிப் பரவியிருக்கின்றாராகலின். அல்லதூஉம் அவர் திருஞானசம்பந்தரொடு கூடியிருந்து படிக்காசு பெற்ற செய்தியை விதந்து, இவ்விரு பெருமக்களும் கூடியிருந்த கூட்டத்தின் பயனே இன்றும் சைவவுலகு நிலைபெற்றிருத்தற்கு ஏதுவாயிற்றென்பார்,

பாடிய செந்தமிழாற் பழங்காசு பரிசில் பெற்ற
நீடிய சீர்த்திரு ஞானசம்பந்த னிறை புகழான்
ஏடியல்பூந் திருநாவுக் கரசோ டெழில் மிழலைக்
கூடிய கூட்டத்தினு லுளதாய்த்திக் குவலயமே"

என்று ஓதுகின்றார்.

# * கல்லாடனார்.

வித்துவான். திரு. க. வெள்ளைவாரணனார் அவர்கள்,
விரிவுரையாளர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலைநகர்.

(முற்றொடர்ச்சி: துணர் உஉ, மலர் ௫, பக்கம் 136)

தலைவனைப் பிரிந்து வருந்துகின்றாள் ஒருத்தி. தோழி அழாதே என அவளுக்கு ஆறுதல் கூறுகின்றாள். அது கேட்ட தலைமகள் தலைவர் வாரா தொழியின் என்னுயிர் இவ்வுடம்பில் நிலைத்திராது. கூட்டை விட்டுப் பறவை பறந்து சென்றாற் போல என்னுயிர் இவ்வுடம்பை விட்டுப் பிரிந்து, வேறெங்குஞ் செல்லாது தலைவர் வினை செய்யுமிடத்துச் செல்லுமாயின் யான் அழா திருக்க முடியும் என்பாள்

"அழா அம் உறைதலும் உரியம் பராரை
அலங்க லஞ்சினைக் குடம்பை புல்லெனப்
புலம்பெயர் மருங்கிற் புள்ளெழுந் தா அங்கு
மெய் இவண் ஒழியப்போகி அவர்
செய்வினை மருங்கிற் செலீஇயர் என்னுயிரே," (அகம்-113)

எனக் கவன்று கூறுகின்றாள். இவ்வடிகளில் உடம்பை ஒரு கூடாகவும் அதனை விட்டுப் பிரிந்து போதற்குரிய உயிரைக் கூட்டை விட்டுச் செல்லும் பறவையாகவும் கூறியுள்ளமை காணலாம். இப்பகுதியில்,

"குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
உடம்போ டுயிரிடை நட்பு,"

என்னுந் திருக்குறட் பொருளை இப்புலவர் மிகவும் சுவைபட எடுத்தாளுகின்றார்.

வினைவயிற் பிரிந்து சென்ற தலைவன் வினை முடித்துப் புறப்படுகின்றான்; தலைவியின் பால் வைத்த பெருங் காதலால் அவனது நெஞ்சம் அவளை அடைதற்கு விரைதல் இயல்பு; வினை முற்றிய பின் தேரேறி வருகின்றான் தலைவன்; விரைந்து செல்லும் குதிரையை எவ்வளவு தூரம் முடுகிச் செலுத்தினாலும் தொலைவு அதிகமாகையால் தன்னூரை யணுக முடியவில்லை; கதிரவன் மறைகின்றான்; மாலைக் காலமும் வந்து விடுகிறது; என் செய்வான்; தன்னெஞ்சம் மட்டும் தலைவியின் பால் விரைந்து சென்று, விட்டதாக எண்ணுகின்றான்; தன்னினும் முந்தச் சென்ற தன்னெஞ்சமாவது இடை வழியைக் கடந்து சென்று தலைவியைக் கண்டு அவளொடு விளையாடி மகிழ்ந்ததோ என எண்ணுகின்றான்; தலைவன் வருகின்ற இடை நிலவழி, இருப்பை மரங்கள் அடர்ந்த செம்மண்ணிலப் பகுதியாகும்; இருப்பையின் இளந் தளிர்கள் அம்புபோலுங் கூர்மையும், செப்புத் தகட்டினை

* 25—7—46-ல் திருச்சிராப்பள்ளி வானொலி நிலயத்திற்பேசியது.

யொத்த உருவமும் உடையனவாய்த் தோன்றுகின்றன; அவ் விளந் தளிர்க் கொததுக்களின் இடையே வெண்ணெய் போன்று வெண்மை யான இருப்பைப் பூக்கள் காணப்படுகின்றன; பவளம் போலும் செந்நிலத் தரையிற் சிதறிக் கிடக்கும் இருப்பைப் பூக்கள் உறைந்த இரத்தத்தின் மேற்படிந்துள்ள வெள்ளை நிணம் போலக் காணப்படு கின்றன; இவ்வழகிய தோற்றத்தை 'கொல்வினைப் பொலிந்த' என்று தொடங்கும் அகப்பாடலில் இப்புலவர் அழகிய சொல்லோ வியமாக வரைந்துள்ளார்;

இனி இவ்விடை நிலவழியைக் கடந்து தலைவியை யடைந்த நெஞ்சத்தின் செயலைத் தலைவன் தன் செயலோடு வைத்துக் கருதிப் பார்க்கின்றான்; மாலை நேரம்; வீட்டினுள்ளே தலைவன் பிரிவால் தனித்து வருந்துகிறாள் தலைவி; அந்நிலையில் நன்மைக்கு நிமித்தமாகிய பக்கததே பல்லி சொல்லுகின்றது; அந்நற் சொல்லைக் கேட்ட தலை மகள் தலைவர் வருவர் என்னும் மகிழ்வால் தெய்வத்தைப் போற்றி நிற்கின்றாள். அங்ஙனம் நின்ற தலைவியின் பின் புறமாக மறைந்து சென்ற தலைவனது நெஞ்சம் அவளது பின்னி விடப்பெற்ற சடை யினைச் சார்ந்து நிற்பதாகவும், அந்நிலையில் அவளுடைய வளையணிந்த கைகளால் தழுவப் பெற்று மகிழ்வதாகவும் எண்ணுந்தோறும் உள்ளத்தையுருக்கு மியல்பிற்றாகிய ஓர் அழகிய காட்சியினைத் தலை வன் தனக்குள்ளே யுருப்படுத்திக் கொள்கின்றான். இவ்வழகிய தோற்றத்தை,

> "ஓங்கிய நல்லில் ஒருசிறை நிலைஇப்
> பாங்கர்ப் பல்லி படுதொறும் பரவிக்
> கன்றுபுகு மாலை நின்றோள் எய்திக்
> கைகவியாச் சென்று கண்புதையாக் குறுகிப்
> பிடிக்கை யன்ன பின்னகந் தீண்டித்
> தொடிக்கை தைவரத் தோய்ந்தன்று கொல்லோ
> நாணொடு மிடைந்த கற்பின் வாணுதல்
> அந்தீங் கிளவிக் குறுமகள்
> மென்றோள் பெறநசைஇச் சென்ற வென்னெஞ்சே"
>
> (அகம்-9)

எனத்தலைவன் தேர்ப்பாகன் கேட்பக்கூறுதலால் நன்குணர்கின்றோம். இவ்வாறு தலைவன் தலைவியின்பால் நகையாடி மகிழுந் திறத்தைத் தன்னைப்போல வடிவும் செயலுமில்லாத மனத்துக்கேற்றி யுரைத் தமை தலைவியின் காதலில்மூழ்கிய அவனது கருத்தைப் புலப்படுத்தல் காணலாம்.

இங்ஙனமே கல்லாடனார்பாடிய ஏனைய பாடல்களும் நவிலுந் தோறும் சுவைமிகப் பயக்குந் திறமுடையனவாம். இத்தகைய செந் தமிழ்ப் பாடல்களின் தீஞ்சுவையினை அறிஞரனைவரும் படித்து இன்புறுவாராக.

# பரத்தையிற் பிரிவு.

பண்டித. ந. ரா. சுந்தரராசன்,
கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சை.

(முற்றொடர்ச்சி: துணர் 22, மலர் 5, பக்கம் 160)

நன்றுரைத்தனிர்! அற்றேல், ஆசிரியர் நக்கீரனார் கருத்தே தக்க தெனப்படுதலின் அதனையே நம் ஐயத்திற் கேற்கும் முடிபெனக் கோடல் அமையாதோவெனின்—அது தேட்கடிக் கஞ்சிப் பாந்தள் வாயில் விழுந்தாற் போலும் முறைமைத்தாகக் காணப்படுதலின் அமையா தென்பது. என்னையோ வெனின், பரத்தையிற் பிரிவான் வரும் ஏதம் விலக்கக் கருதிய ஆசிரியர், இவன் யானையும் குதிரையும் இவை யெனவும், இவனுரிமை இது வெனவும் மற்று மெல்லாம் இவற் கென்று வகுத்து வைத்து வழங்கித் துய்ப்ப என்றுரைத்து இங்ஙன மாதலின் அவற்கு உரிமையாயினார் மாட்டே பிரிந்ததனானும், அது தானும் குரவர்பணி மாறுகொள்ளலாகாது என்னுங் கருத்துப் பற்றியே யாகலானும் குற்றமாமாறு இல்லை யென்னுங் கருத்துப்பட முடித்துரைத்துப் போந்தார். எனினும், தலைவியின் வேறாக உரிமை மகளிரை வகுத்து வைத்தமை (அது தானும், அவனது இளமைக் காலத்தே—அவனறியாமையே வகுத்து வைத்தமை) எற்றிற்கு எனக் கூறிற்றிலராகலானும், உரிமை மகளிராயின் அவர் தம்மைப் பரத்தையர் என்றல் சாலாதாகலானும், யானையும் குதிரையும் போல் வனவற்றோடு ஒப்ப வைத்து மகளிரையும் விலங்கு போல ஒருங் கியைத்து உரிமையாக்கினா ரென்றலும், அவர் தாம் பின்னொரு ஞான்று தலைமகனுக்குத் தாம் அவனுரிமையாமா றுணர்த்தி அவனை நயப்பிப்பர் என்றலும் பிறவும் அத்துணை நாகரிகமாகத் தோன்றாமை யானும், கலைநலங் கருதிப் பரத்தையர்பாற் பிரிவனெனின் அதுபோது, சுற்றிப் போயுஞ் சுங்கத்துறையில் வந்து கூடிய முறைமையே போல, தலைமகளுக்கு அத்தகு கலைநலம் இன்றெனப் பட்டுப் பின்னும் பெரிய தோர் ஏதமாய் முடியுமாகலானும் பொருந்தா தென்பது.

இனி, ஆசிரியர் நக்கீரனார் கூறிய இக்காரணங்களின் வேறாக ஏனை யுரையாசிரியர்கள் யாரும் சிறப்பாக ஏதும் கூறக் காணாமை யின், அவர்கட்கும் நக்கீரனார் நவின்ற கருத்தே உடன்பாடென்பது அறியப்படுகின்றது. ஆனால், திருக்கோவையார் உரையாசிரியர் மட்டில், நக்கீரனாரின் கருத்துக்களையே பெயர்த்தெடுத் துரைத்துத் தழீஇக் கொண்டு, அல்லதூஉம், தலைமகளை ஊடல் அறிதற்குப் பிரிதலுமாம், என மேலுமொரு காரணங் கூட்டிக் கூறினார். இக் கருத்துச் சிறப்புடையதாகவே தோன்றுகின்றதெனினும், ஏனையுரை யாசிரியர்களாற் கூறப்படாமை ஒன்றேபற்றி இதன்கண்ணும் ஏதோ குற்றம் உளதென்பது தெற்றென உணரப்படும். ஆதலின் இதுபற்றி நாம் சிறிது ஆராயற்பாலம்.

ஊடல் என்பது தலைமகனின் இன்ப நுகர்ச்சி விரைவிற்குத் தடையும் துன்பமுமாகத் தலைவிகண் நிகழ்வதாகலின், அதன்திறம் அறியல் வேண்டித் தலைமகன் பிரியும் என்பது பொருந்துவதாகத் தோன்றுகின்றிலது. அன்றியும்,

"புல்லா திராஅப் புலத்தை அவருறும்
அல்லல்நோய் காண்கம சிறிது'

எனத் தோழியும் தலைவியுமாயின் ஒரோவழித் தலைமகனின் உளநிலை யறிதற்கு அதனை வேண்டுவ ரென்பதல்லது, தலைமகன் வேண்டும் என்பதற்கு அங்ஙனம் போந்த சான்றோர் செய்யுள் இல்லை யென்பது. அற்றேல்,

"கொடுங்குழாய் துறக்குந ரல்லர்
நடுங்குதல் காண்மார் நகைகுறித்தனரே"

என்றும்,

"ஊடுக மன்னோ ஒளியிழை யாமிரப்ப
நீடுக மன்னோ இரா"

என்றும் இலக்கியங்களுள் வருவதென்னை யெனின், அற்றன்று. முதலதன்கண், தலைமகளை ஆற்றுவிக்கக் கருதுந் தோழி அவளை ஆற்றுவித்தற் பொருட்டுத் தலைவர் நகைகுறித்தனரல்லது உண்மையிற் பிரிவாரல்லர் எனக் கூறி ஆற்றுவித்தனள் என்பதன்றித் தலைமகனே நடுங்குதல் காண்மார் நகை குறித்தனன் என்பது நேரே பெறப்படாமையானும், பின்னதன் கண் தலைமகளை யூடலுணர்த்திப் புணர்ந்து மகிழ்ந்த தலைமகன் அப் புணர்ச்சி இன்பச் சிறப்பு நோக்கி முன்னர் நிகழ்ந்த ஊடலைப் பின்னர்ப் புகழ்ந்த அத்துணையே யன்றிப் பின்னர் நிகழப்போகும் ஊடலினை முன்னரேயே விரும்பிப் புகழ்ந்துரைத்தன னல்லனாகலானும், தலைமகளை யூடலறிதற்குப் பிரிவான் தலைமகன் என்றல் பொருந்தா தென்பது.

இத்துணைத் தொல்லைகளெல்லாம் எற்றுக்கு? நக்கீரனார் கூறியது போலவே இதனை இல்லது இனியது நல்லதென்று புலவரால் நாட்டப் பட்டது எனக்கூறி முற்றிலும் புனைந்துரை, எனப் புகன்று விட்டா லென்னை யெனின், "இஃது இல்லதெனப் படாது உலகியலேயாம். உலகியலின்றேல் ஆகாயப் பூ நாறிற்று என்றவழி, அது சூடக் கருதுவாரு மின்றி இழித்திடப்படுதலின் இதுவும் இழித்திடப்படு மாகலானும், இல்லதென்று கேட்போர்க்கு மெய்ப்பாடு பிறந்து இன்பம் செய்யாதாகலானும், உடன் கூறிய உலகியல் வழக்கத்தினை ஒழித்தல் வேண்டுமாகலானும் அங்ஙனங் கூறுதல் அமையா'தென்று ஆசிரியர் நச்சினார்க்கினியர் மறுத்ததுண்மையின், அது கொளற்குரித் தன்மை பெறப்படும். அற்றேல், இதனை நாடக வழக்கு என்ப தென்னையெனின், யாதானும் ஒரோவழி ஒருசாரார் மாட்டு உலகியலான் நிகழும் ஒழுக்கத்தினை எல்லார்க்கும் பொதுவாக்கி இடமும் காலமும் நியமித்துச் செய்யுட் செய்தல் ஒப்புமை நோக்கியே என்றும், யாண்டும் எஞ்ஞான்றும் இல்லன கூறார் புலவர் என்றற் கன்றே நாடக மென்னுது வழக்கென்பாராயிற் றென்பது" என்றும் அவர்தாமே விளக்கங்கூறியுள்ளமை கண்டுகொள்க.

அற்றேல், பரத்தையிற் பிரிவு குறித்துக் கூறத்தக்க அமைதி தான் யாது அதனை முடித்துக் கூறுகெனிற் கூறுதும். பரத்தையிற்

பிரிவென்பது தலைவன் உண்மையிலேயே பரத்தையர்பாற் பிரிந்து அவரைப் புணர்ந்து மீண்டு வருவான் என்பதன்று; புலவர்கள் தாம் வகுத்துக்கொண்ட புலனெறி வழக்கின்கண் மருதத்திணைக்கு உரிப் பொருள் ஊடலும் ஊடல் நிமித்தமுமாதலின், தலைமகன்பால் ஊடலை விரும்புந் தலைமகள் அங்ஙனம் அவன்கண் ஊடுதற்குச் சிறந்ததொரு தலைக்கிடாகத் தலைமகன் தன்னையன்றிப் பிறர் சில மகளிரையும் விரும்பிப் புணர்ந்தொழுகிப் போதருவானாக வாளாது ஏறிட்டுக் கூறியூடுவதாகப் பாடும் அத்துணையேயாம்.

"இல்லை தவறவர்க் காயினும் ஊடுதல்
வல்ல தவரளிக்கு மாறு."

"தவறில ராயினும் தாம்வீழ்வார் மென்றோள்
அகறலின் ஆங்கொன் றுடைத்து."

என்பன போலத் தலைவி கூற்றாக வரூஉம் இலக்கியங்களே இதற்குச் சான்றாம்.

"கிழவோள் பிறள்குணம் இவையெனக் கூறிக்
கிழவோன் குறிப்பினை யுணர்தற்கு முரியள்"

என வரும் பொருளியல் நூற்பாவும் ஈண்டுக் கருதுதற்குரியது. மற்றும் பெண்மகளிர்க்குத் தம் காதன்மை மேலீட்டால் தலைமகன்கண் நிகழாததனையும், இல்லதனையுமெல்லாம் ஒரோவழி நிகழ்வதெனவும் உள்ளதெனவும் பிறழக் கருதிக் கோடல் இயல்பே என்பது,

"அம்பலும் அலருங் களவு"

"ஆறின் னருமையும் ஊறும் அச்சமும்
தன்னை யழிதலும் கிழவோற் கில்லை"

என்னும் நூற்பாக்கட்கு ஆசிரியர் நக்கீரனார் உரைத்துப் போந்த விரிவுரைகளான் விளங்கும். அன்றியும், இங்ஙனம் பரத்தையிற் பிரிவென்பது புலனெறி வழக்கம் பற்றிச் சுவை பயப்ப வகுத்துக் கொள்ளப்பட்டதே என்பது.

"அஃதேயெனின், மற்றைப் பிரிவெல்லாம் வேண்டுக. ஆள்வினை மிகுதி யுடைமையான்; இஃதெற்றிற்கோ வேண்டிய தெனின்— பரத்தையிற் பிரிந்தான் தலைமகன் என்றால் ஊடலே, புலவியே துனியே என்றிவை நிகழும். நிகழ்ந்தால் அவை நீக்கிக் கூடின விடத்துப் பெரியதோர் இன்பமாய், அவ்வின்பத் தன்மையை வெளிப் படுப்பன அவை யெனக் கொள்க. மென்சுவை மேலே நடந்தானோர் ஆசிரியனாகலான், இப் பிரிவு வேண்டினான் என்பது"

என நக்கீரர் தாமே நவிலுமாற்றான் உணர்ந்து கொள்ளப்படும். இவ்வாறு உலகியலின்கண் அறக்கழிவுடைய பரத்தையிற் பிரிவினை, ஒரு பொருட்பயம் கருதிப் புலனெறி வழக்கிற் குரித்தெனத் தழீஇக் கொண்ட வழூஉப் போல்வனவற்றை யமைத்துக் கோடற் பொருட் டன்றே,

"அறக்கழி வுடையன பொருட்பயம் படவரின்
வழக்கென வழங்கலும் பழித்தன் றென்ப"

என்றோதுவாராயினர் தொல்காப்பியனாரும் என்பது.

அற்றேல், ஈதென்னை? முழுப்பூசுணையைச் சோற்றிலே மூடி மறைக்க முயலுவார் போலப் பேசுகின்றீர்!

"காதற் பரத்தை எல்லோர்க்கு முரித்தே"

என்றும்,

"பூப்பின் புறப்பா டீரா று நாளும்
நீத்தகன் றுரையார் என்மனூர் புலவர்
பரத்தையிற் பிரிந்த காலை யான"

என்றும்,

"கற்பினுட் பிரிந்தோன் பரத்தையின் மறுத்தந்
தறப்பொருள் படுப்பினும் வரைநிலை யன்றே."

என்றும் இங்ஙன மெல்லாம் பரத்தையிற் பிரிவுபற்றி விதிமுகத்தாற் கூறும் சூத்திரங்கள் பல உள்ளனவன்றே? அவையிற்றால் பரத்தையிற் பிரிவென்பது உண்மையில் நிகழ்வதே என்று கொள்ளக்கிடக்கின்றதே யன்றோவெனின்—அற்றன்று; "காதற்பரத்தை எல்லார்க்கும் உரித்தே" என்னும் நூற்பா நுதலிய பொருளே வேறு. அதனை யறிந்து கொள்ளாது அது விதிமுகத்ததாய் இருத்தல்பற்றி ஒவ்வொருவர்க்கும் காதற் பரத்தையுடையராதல் இன்றியமையாதது என்று விதித்தார் எனப் பிழைபட எவருங் கொண்டு விடற்க. ஆசிரியர்க்கு அது கருத்தாயின்,

"காதற் பரத்தை எல்லார்க்கும் உரியள்"

என்றுதல்,

"காதற் பரத்தைமைக் கெல்லாரும் உரியர்"

என்றுதல்,

"காதற் பரத்தை எல்லார்க்கும் உண்டே"

என்றுதல், பிறவாறுதல் உரைத்திருப்பர்மன். அவ்வா றுரையாது, "காதற் பரத்தை எல்லார்க்கும் உரித்தே" என முடிபு வழுப் போலக் கூறினாராகலான் அவர்தம் கருத்து, மேல் இன்னின்ன பிரிவு தலைமகற்கு நிகழும் என்றார் அவையிற்றிற்குரிய மக்களையும் விதித்தாரன்றே? அவ்வடைவே பரத்தையிற் பிரிவிற்கும் கூறுவாராய், அதன்கட் பிரியும் பிரிவு மேலன்போலன்றி, அந்தணர் அரசர் வணிகர் வேளாளர் என்னும் நால்வர்க்கும் ஒருபடித்தாகவே உரியது என்றலேயாம். இதனை,

"அஃதேயெனின், "காதற் பரத்தை எல்லார்க்கும் உரியள்" என்றுகாதே சூத்திரஞ் செய்தற்பாலது? உரித்தென்று அஃறிணை வாய்பாட்டாற்சொல்லிற்று எற்றிற்கோ எனின், பிரிவதிகாரம் வாரா நின்றமையால், பிரிவும் உரித்தென்று சொல்லப்பட்டது."

என நக்கீரனார் ஆண்டு விளக்கி யுரைத்ததும் காண்க. இன்னும் இங்ஙனமே பிறநூற்பாக்களுக்கும், பிற பிரிவுகட்கெல்லாம் கால வரையறையும் இடைப்படு நிகழ்ச்சிகளுமெல்லாம் விதித்தவாறு போலப் பரத்தையிற் பிரிவிற்கும் அவை விதித்தலே கருத்தெனத் துணிந்துகொள்க.

(தொடரும்.)

# வயங்கு வளியின் வளாகம்.

திரு. த. பு. நவநீதகிருட்டினன் அவர்கள்,
இயற்கைப் பொருட்கலைப்பகுதித் தலைவர், அண்ணாமலைப்
பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர்.

(முற்றொடர்ச்சி: துணர் உஉ, மலர் ரு, பக்கம் 156)

ஒக்கற் சுட்டுவரியினின்று மேலே கிளம்பிச் செல்லும் காற்றின் பகுதிகள் சில, 'எதிர் வணிக வளிகள்' என்றவாறு, 20° என்ற குறுக்கை விரித்தனையைக் கடந்த பாங்கர்களில் வீசுவன. வேறு சில பகுதிகள், 20° என்ற குறுக்கை விரித்தனையினண்மையினுன இடங்களிலேயே, முற்றும் குணதிசை யியக்கமுற்றன வாயாவன ஆதலால், ஆங்கெலாம் அவை, மேல்காற்றுகளான 'கோடைகள்' என வீசுவன.

ஆய நிலைப்புக்களினின்று செல்லும் வளிகள், போகப் போக, வெப்பநிலை யேறிக்கொண்டு போகும் வண்ணம் செல்வன; ஒக்கற் சுட்டு வரியினின்று கிளம்பிப் போகும் காற்றுக்கள், செல்லச் செல்ல வெப்பநிலை யிறங்கிக் கொண்டு செல்லும் போக்கினவாயாவன. 60° என்ற குறுக்கை விரித்தனை யினமைத்த பாங்கரில், அவ்விருவகை வளிகளும் ஒன்றை யொன்று முட்டுவன. ஆதலால், ஆங்கு, காற்றோட்டம் மிக, சொற்பமாகவே யிருக்கும். நெடுவழி வந்த ஒக்கற்சுட்டு வரியியலான காற்றுக்களில் பெரும் பகுதிகள் ஆங்கே ஓய்ந்துபோவன. குறுவயவையே வந்த ஆயநிலைப்பியலான வளிகளில் பெரும் பகுதிகள் மேலும் வயங்குவன. நாம் மேற்கூறினபடி, வணிக வளிகளென வீசுவன.

ஆயநிலைப்புக்களினின்று செலவாகின்ற காற்றுக்களில் சில பகுதிகள், 60° என்ற குறுக்கைத் தனைப் பாங்கர்களை அடைதற்கு, சிறிது முன்னரே, முற்றுமான குடதிசை யியக்க முறுவன. ஆதலால் அவை, ஆங்கெலாம் கீழ்க் காற்றுக்களாய் வீசுவன. அவை, 'ஆயநிலைப்பியலான கொண்டல்கள்' எனப்படுவன.

ஆயநிலைப்பிடங்களை நோக்கிக் கிளம்பின காற்றுக்கள், அவற்றை அடைவதற்கு முன்னரே வேறு வழிகளில் போய்விடுவன. ஆதலால், ஆங்கெலாம் காற்று மிகுதியாய் அடிப்பதில்லை.

மேற்கூறப்பட்ட வகைகளினவான வளிகள் (அதாவது, வணிக வளிகள், எதிர் வணிக வளிகள், ஒக்கற் சுட்டுவரி யண்டைக் கொண்டல்கள், 20° குறுக்கைத் தனையியலுக் கோடைகள், ஆய நிலைப்பியலான கொண்டல்கள் என்றவை), கோளுழுவலான வளிகள் (Planetary Winds) எனப்படுவன; ஏனெனின், அவை கோள்களைப் பொறுத்த பொது முறைகளான இரண்டையொட்டி எழுவன. அவ்வொப்புரவுகள் பின்வருமாறுனவை. (1) பரிதி நோக்கின வாட்டத்திற்கு, கிட்டத்தட்ட செங்கோணமான திசையினமைந்த ஆயத்தைக்

கொண்டுள்ள விரைவு மிக்க சுழற்சியுடைமை (2) திரும்புமெல்லை கோலின பாங்கர்களிலும் (Tropical Regions) ஆயநிலைப்பிடங்களிலுமான காற்றுக்களிடை, வெப்பநிலைப் பொறுத்த வேற்றுமை மிகுதிப்பட்டு, அற்கலாயமைந்து, பாடிக் கூறுகளிடை (Inter-Zonal) இடையருது காற்றுச் சுற்றோட்டம் நடைபெறும் நிரல்.

கோளுழுவல் பாற்படா வளித்திறங்களில் முக்கியமானவை மாரிக் கூதைகள் (Monsoons) என்பபடுகின்றவை. நமது நாட்டில் சிறப்பாயிருப்பவை, அவ்வகையினவே. ஸைபீரியாவெனும் அகலுள் வேனிற்காலத்தில் மிக வெப்பமுற்றும், குளிர்காலத்தில் மிகக் குளிர்ந்தும் வரலையொட்டி வடகிழக்கு மாரிக் கூதைகள் எழுவன, குளிர்க்காலத்திலான நளிர்க்காற்று ஸைபீரியாவினின்று தென்றிசை நோக்கிச் செல்லலாகும். உலகச் சுழற்சியின் பொருப்பாய், அவ்வளி குடவாட்டச் செலவை அடைகிறது. ஆகவே தென்மேற்காய் அடித்ததாகி, தானுறைக்கும் இடங்களில் வடகிழக்கு வளியாயிருப்பது. அஃதே, நாம்பெறும் வடகிழக்கு மாரிக்கூதையானது. சீனாக்கடலின் வழியேயும் இந்துக் கடலின் வழியேயும் அக்கூதை வயங்குவதாம். வெனிற்காலத்தில் ஸைபீரியாப் பரப்பு வெம்மை மிக்க தாயாதலால், ஆங்கான காற்று மேலெழும்பி தென்றிசை நோக்கிச் செல்வதாகும். ஸைபீரியாவை நோக்கி, ஒக்கற்சுட்டு வரிப்பாங்கரினின்று காற்று செலவாகிறது. வடக்கு முகமாய், செல்லத் துவங்கும் அவ்வளிகள், உலகச் சுழற்சியின் பொருட்டாய் குணவாட்ட வியக்கத்தை கூடப் பெறுவன. ஆகவே வடகிழக்காயேகினவாறு, அவை வீசும் இடங்களில் தென்மேற்கு வளிகளாயிருப்பன. வடகிழக்குவளி, சீன, இந்துக்கடல்களின் வழியே யேகுங்கால், நீராவியேற்றான முகில்கள் செறிந்ததாயாகின்றது. தென்மேற்குவளி, ஒக்கற் சுட்டுவரிப் பாங்கரின் கடலினின்றெழும் நீராவி யேற்றானவாறே வழிசெலக் கிளம்புவது. ஆகவே, அஃது புயலடர்ந்திருப்பது. அவ்வாறாயானமையின், மாரிக் கூதைகள், நாம் செல்லும நாடுகளில், பெரும்பெயல் பொழிகின்றன.

உலவையியலுகிற நாம், சூறாவளியைக்கண்டு அஞ்சவேண்டாம். அதை நெருங்கிக் காணுவோம். சூறாவளி கோட்பான பரப்பினது வடிவம் வட்டமாகவேனும், ஓரிய வட்டமாகவேனும் இருக்கலாம்; அதன் குறுக்களவு, ஐம்பதுமுதல் ஆயிரம்மைல்வரை இருக்கலாம். சூறையாய்க் கெழுமின வளிகள் பொதுவான நடுவொன்றை ஆயமாய்க் கொண்டு, மணிக்கு, நூறுமுதல் நூற்றைம்பதுமைல் வரையான விரைவுடன் சுழன்று சுழன்று அடித்துக் கொண்டிருப்பன. அவ்வாறான நடு, அமுக்கங் குறைந்த விடமாயிருப்பது. தென்னரைக் கோளத்தில், பொழுதளவியின் முள்ளியங்கு வாட்டத்தினும், வடவரைக் கோளத்தில், அவற்கு எதிரான வாட்டத்தினும் சூறையின் வளிகள் சுழல்வன. செறிந்த புயல்களும் இடியும் மின்னலும பெரும்பாலும் அவற்றின் தொடர்பாய்த் தோன்றுவன. தென் அட்லாண்டிக்கைத் தவிர, மற்ற எல்லாமான திரும்பெல்லை கோலலுற்ற கடல்

களிலும் அவ்வகை சூறைகள் நேரிடுவன. மெக்ஸிகோ வளைகுடா, கார்ரிபியன்கடல், வட அட்லாண்டிக்கு கடல், சீனக்கடல், வங்காள விரிகுடா, என்றவற்றில் அடிக்கடி சூறைகள் அடிப்பன. அவ்வாறான சூறைகள் ஒக்கற்சுட்டு வரிக்கு வடக்கே, 5 "முதல் 20" வரையான குறுக்கை விரித்தனைக ளிடைப்பட்டனவான துஞ்சழுவங்கள் (Doldrums) என்ற அமைதியருப் பாங்கர்களினின்று பொதுவாகக் கிளம்புவன. ஆங்கெலாமான வெப்பக் காற்றுக்கள் ஈரப்பொதி மிக்கனவாயாவன. நீராவியின் செறிவு (Density) காற்றினதற்குக் குறைந்த அளவானது. வெப்பவளியினது, குளிர்ந்த வளியினதினும் குறைந்தது. ஆகவே, நீராவியேற்றான வெப்பக் காற்று மிகவும் இலேசாயிருப்பது. எனவே, புயல்கள் ஈட்டமாகி, இடிகள் இடிப்பன. நிறையொற்கமான அக்காற்றினவர்ச்சியை யொட்டி, கீழ்ப்பரப்புக்களில் காற்றோட்ட முண்டாகும். அங்ஙனம் விரவுகிற காற்றுக்கள் உலகச் சுழற்சியின் பொருட்டு கொண்டும், பன்மருங்குகளிலுமாய் அவற்றை எதிர்க்கும் வயங்குவளிகளால் தள்ளப்படலாலும், சுழல்விக்கப் படுவன. சுழலுவிரைவினளவு துவக்கத்தில் குறைந்தே யிருக்கும்; ஆனால் சுழலு நடுவை நெருங்க, நெருங்க, சுலவுச்செலவு கடுமையாய்க் கொண்டேபோகும். காற்று ஏறுங்கால் விரிவடைகிறது; அதனால் குளிர்வுறுவது. அதன் விளைவாய் காற்றினேற்றான நீராவியிலொரு பகுதி இறுகி நீர்த்துளிகளாயாவன; நீராவியில் பொதிந்திருந்த வெப்பம் வெளிப்போந்துவதாகும். வெம்மை வந்து கொண்டே யிருக்குமாதலால், காற்றோட்டம் இடையறுது நடந்தேறினதாகி, காற்று விரிந்த பெருக்கமடைவதாகும். சுழல்வியலான அத்துயல்வரல்கள் ஒருமுறையாகத் துவங்கினபிறகு, நீராய் இறுகற்கான நீராவியேற்று, காற்றிலுள்ளவரை, நீடித்திருப்பன. சூறையானது தன் மருங்கிலான வணிக வளியன்ன பெருவளியுடன் தொடுப்புற்றதாகும்; அப்பெருவளியால் சுமக்கப்பட்டவாறு, ஆயிரங்களாயான எண்மிக்க மைல்கள் சேய்மைக்கு, திரும்பெல்லை கோலின கடல்மீது சறுக்கிக் கொண்டே வயங்குவதாகும். நிலங்காணும்வரை, அன்றி குறுக்கை விரித்தனையேற்றமான குளிர்ப்பாங்கர்களை அடையும்வரை அங்ஙனம் போய்க் கொண்டே யிருக்கும். அவ்வகைச் செலவு பல நாட்களுக்கு நீடித்திருக்கலாம். பொதுவாக, இரண்டு வாரங்கள் அவ்வழியே கழிவன. ஓரோரமையம் மூன்று வாரங்களுக்கும் அதற்குமேலாயும் அச்செலவு நீண்டதாகலாம். நெடுஞ்செலவின் இறுதியில் நீராவி காணு வறுமையின் வறண்ட பாங்கர்களை அச்சூறைகள் அடைவன. அவ்விடங்கள், சூறைகளின் ஈரப்பொதியைக் கவர்ந்து கொள்வன. சூறை தன் வன்மையை இழந்து ஓய்வதாகும். பொதுவாக, அவ்வகை சூறுவளிகள், கிழக்கினின்று மேற்காயேகும் வணிகவளியேறி, தம் நெடுவழி செல்வன. பிற்பாடு அமுக்க மிக்க படப்பை யடைந்து, அதன் மருங்கிலான தொடுப்புத்தறியின் குடநுதியை வட்டமிட்டவாறு, பைபயத்திரும்பி, குணதிசை நோக்கி ஊசலாடியோடுவன, ஓரோரமையம், மேலே கூறினபடி நிலமடைந்து, புயல்மல்கின பெயலுடனான சூறையாய் அடித்த பிறகு கலைந்து போவன. சூறைகள்

கடிதோறும்செலவிடும் ஆற்றலினவுகள் வியத்தகுவானவை. ஜப்பான் நாட்டுஆன்றோரான 'ஹோரிகூட்டி' என்பார் இத்திற சூறையாராய்ச்சியில் மிகவும் ஈடுபட்டனர். அவர் அளவிட்டறிந்தபடி, பொதுவான சூறையொன்றின் பாற்பட்ட நீராவி, நீராய் இறுகலின்போது விடுவிக்கப்படும் சூட்டுத் தரமான ஆற்றல், நூற்றிருபதாயிரக்கோடி குதிரைத்திறன் (Horse-power) கொண்டதாம். அதாவது, ஸெக்கண்டு ஸெக்கண்டிற்கு அத்துணை எண்ணிக்கையான குதிரைகள் செய்யும் வேலைக்கீடானது, அச்சூட்டைப் பயன்படுத்தி செய்விக்கப்படலாம். சூறையின் இயக்கத்திற்கென செலவாக்கப்படும் ஆற்றலினளவு இரண்டாயிரத்து எழுநூறுகோடி குதிரைத் திறனுனதாம்.

கொடுஞ் செலவுகொண்ட வளிகளுக்கு விடை தந்து அவற்றின் வழியேயேக அனுப்பிவிட்டு, நாடொறும் வீசுகிற மென்காற்றுக்களை வரவேற்போம். கடற்கரையி னமைந்த பாண்டில்களில் வீசும் வளிகளைப் பற்றிக் கூறுகிறேன். பகற்பொழுதில் வெயில் படலால் முந்நீரின் வெப்பநிலை யேறும் அளவைவிடப் பன்மடங்கு மிக்கவளவுக்கு அப்பொருட்டாலேயே, வியனிலத்தின் வெப்பநிலை உயர்வதாகும். ஆதலால், கடல்மீதான காற்றமுக்கம் நிலமீதானதைவிட மிகையளவினதாயாகும். அமுக்கமிக்க இடங்களினின்று அமுக்கம் குறைந்த வைப்புக்களை நோக்கிக் காற்று செல்வதாகும். ஆகவே, கடலினின்று கரைப்புறமாய்க் காற்று வீசுகிறது. பகலின் வெயில்பட்டு விரைவின் வெப்பமேறின நிலம், வெயில் மறைந்து இரவு வந்தவுடன், சடுதியில் குளிர்வுறுகிறது. மெல்லமெல்லவே சூடேறின நீர்ப்பரப்பு, பையவே வெம்மையை வெளிவிடும் இயல்பினது; ஆதலால் இரவு வேளையில், கடலானது நிலத்தைவிட வெப்பமிக்கதா யிருப்பதாகும். அதையொட்டி நிலத்தினின்று கடல் வாட்டமாய் வளிவீசுகிறது. அவ்வாறுன நாடோறு வளிகள் காற்றுவெளியின் தாழ்ந்த மட்டங்களிலேயே வீசுவன. கடல் மட்டத்தினின்று ஆயிரத்துஐந்நூறு அடிக்குமேலே, அவை வீசா; கடற்கரையினின்று தொலையான உள்நாட்டுப் பாங்கர்களுக்கு வயங்க வொல்லாதன. கானலினின்று இருபத்தைந்து மைலுக்கு அப்பாலான இடங்களில் அவை ஓய்ந்துபோவன, ஆயினும் கானல் மருங்குகளில் வதிய வாய்ந்தோர் அம்மென்காற்று தரும் இளைப்பாற்று நீர்மையி னெழிலை வரவேற்கா நிற்பார்.

(தொடரும்.)

# அண்ணாமலைநகரில் மணிநாவொலி

புலவர். சுப. மாணிக்கம், B. O. L.,
விரிவுரையாளர், அண்ணாமலைப்பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர்.

தமிழ்க் கல்விக்கு வரம்பெனப்படும் புலவோர் சிலருள் ஒருவராகிய பெரும் பேராசிரியர் பண்டிதமணி கதிரேசச் செட்டியார் அவர்கள், ஆராய்ச்சித்துறை அலுவலினின்றுந் தாமே விடைபெற்று விலகிக்கொண்டு, தமதூர் செல்வுழி, அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப்பகுதி, தமிழிசைப்பகுதி ஆசிரியர்கள் குழுமி 2—8—46-ஆம் நாள் வெள்ளிக்கிழமை சாயுங்காலை நாவிருந்து நடத்தினர்.

தமிழ்ப் பேராசிரியர். அறிஞர். அ. சிதம்பரநாதன் செட்டியார் தம் உரைக்கிடையில், திருவாசக முதலாஞ் சமயநூற் கண்ணும் நயம் பல வுண்டென்று கிளந்து, அது காணு முறைகளைச் சொற்பொழிவால் கற்பித்த முதல்வர் முதுபெரும் புலவரேயாவர் என்று புகழ, விரிவுரை முதல்வர் கரு. இராமநாதன் செட்டியார், விருந்தினரின் உடற்றளர்ச்சியைப் போக்க ஔவைக்கு நெல்லிக்கனி யீந்த அதிகன் போல்வார் இன்று இல்லை கொல் என்று தம் வேணவாவை வெளியிட, விரிவுரையாளர் அ. பூவராகன் பிள்ளை, தம்மொடு தொடர்புடையார் நலனைத் தந்நலமாகவே கருதும் பண்டிதமணியின் சால்பினை வரலாற்றில் வைத்து இன்புறுத்த, ஔவை. சு. துரைசாமி பிள்ளை, தமிழகம் விரும்பும் திருவாசக நுண்ணுரையை விரைவிற்றந்தருள வேண்டும் என்று வியங்கோள் செய்ய, இசைப்பகுதியின் சார்பாகக் கோமதி சங்கரையர், இயற் புலவரின் இசைத்துறையறிவை எடுத்துச்சொல்ல, நாவின் பிறிதொருதொழிலாகிய பாராட்டு விருந்து முடிவுற்றது.

நன்றிமொழி புகலத் துவங்கிய பண்டிதமணி, நீங்கள் என்னைப் புகழ்ந்த செயல் ஒக்கும் என்றனர். தம் முன் தம்புகழ் கூறக்கேட்ட அவர் தலை சாய்த்துத் துஞ்சுமரம் போலவன்றோ நாணுதல் வேண்டும்; அது செய்யாராய் மேலும் உடன்பட்டது அறத்திற்கு எத்துணை முரணென அவர் பின்னுரை கேளாக்கால் நம்மனோர்க்குத் தோன்றுவதியல்பே. ஒக்கும் என்ற பண்டிதமணி, ஒருவனை இளமைப் பருவத்துப் பிறர் புகழுதல் வேண்டா. மனக் கிளர்ச்சிக்கு வேண்டும் உணர்ச்சியை அவனுக்கு அவ்விளமைப் பருவமே கொடுக்கும். மேலும், அப் பருவத்து ஊறும் வீறு பெரிதாகலின் ‘இளையானடக்கம் அடக்கம்’ என அஃதொரு அறமாகவும் கூறப்பட்டது. முதுமைப் பருவத்தா னொருவனைச் செயலின்றி அடக்க அப் பருவமொன்றே யமையும். அவனைப் பிறர் அடக்கப் புகுதல் பேதைமை. அதற்கு மாறாக அவர் கடமை யாதெனின், பருவ மடக்கிய அவன் மனங் கிளர்ந்து செயற்பட வேண்டுமேல், உடல் வீறுடைய இளமைக் காலத்து முனைந்து செய்த நற்றிறங்களை அவன் முன்னர்ப் புகழுதல் வேண்டும். இவ் வுண்மையைக் கருதிக்கொண்டு அறுபத்தை யாண்டு அகவை மூதாரிப் புலவனாகிய என்னை என் முன்னர்ப் பல படப் பாராட்டியது அறிவுடைமையே என்று விளக்கினார். இவ் விளக்க வுரை கேட்பார் ஒக்கும் என்ற அவர் பெருமித வுரை வாழ்விற்கு அரணாக அமைதலைக் காண்பார். தம் முன்னர்ப் பிறர் புகழுஞ்

செயலும். புகழக் கேட்குந் தஞ் செயலும் அறத்தின் கழிவேனும், அது முதுமைக் காலத்துச் சோர்வினை ஒழிப்பது போன்ற பொருட் பயன்படவரின், பழிக்கப்படா வழக்கமே யென ஒரு உலக நிகழ்ச் சிக்குப் பண்டிதமணியின் நூல் நுழைந்த மதிநுட்பம் அமைதி காட்டுகின்றது.

மேலும், பண்டிதமணி, யான் முதுமையுந் தளர்வும் உடையேன்; ஊழ்வினை வயத்தால் இவ் வுடம்பிற்கு விரைவில் ஊறு உண்டாமேல் எனக்கு மறுபிறவி யுண்டென்பது உறுதி. உண்டாமேல், தமிழாசிரிய இளைஞர்களாகிய உங்கள் காலத்தே வகுப்பில் தமிழ்ப் பாடங் கேட்கும் ஒரு மாணுக்கனுக அமர்தலும் உண்டு. கற்பா ஞெருவன் தன் முதிராப் பருவத்தே படிப்பில் ஆர்வங் காட்டுதலும், பொருளில் சுவை காண்டலுஞ் செய்வானேல், இவன் இப் பருவத்தே இன்ன ஞதற்குக் காரணம் யாது கொல் என்று சூழ்வீர்கள். சூழின், முற் பிறவியிற் சாந்துணையும் இவன் தமிழ் கற்றதன் மணம் போலும் என்று முடிவு கொள்வீர்கள். அம் மாணுக்கன் அகவையை என் மறைவு நாளொடு கணக்கிட முரணுதிருக்குமாயின், அவனுக யான் பிறந்திருக்கின்றேன் என்று நீவிர் தெரிந்து அன்பு பாராட்டலாம் என நகை படவும் தம் புலமைத் தகை படவும் கூறினூர். அவர் முக நோக்கி அமர்ந்திருந்த யான், 'இவ்வுடம்பிற்கு ஒல்லையில் ஊறு உண்டாமேல்' என்று சொல்லி வருகையில், துணுக்குற்றேன். கண்ணீர் பிலிற்றியது. ஆடூஉவாதலான் வருபனி கரந்த கண்ணன் ஆகினேன்.

"அரிதுண ரகத்தின் அவளணி சிலம்பின்
விரிவுரை வரைந்த வேங்கட சாமியும்
நற்றவ வாழ்வினன் நாரு மலரினன்
கற்றவன் அன்பினன் கந்த சாமியும்
மறவாத் திறத்தினன் வழக்குரை அறிஞன்
இறவா வுணர்ச்சி யெந்தமிழ்க் காசுவும்
வள்ளலைப் பாடிப்பொன் வழங்கப் பெற்ருேன்
எள்ளறு முரையினன் இராகவ முதியனும்
நண்ணூர் பாடவு நாடு கேட்கவும்
பண்ணூர் தமிழினைப் படுகுழி யெழுப்பியோன்
அண்ணு மலையான் அரணெனு நகருள்
இருந்த காலை யிறத்தல் காணேம்;
மருந்தில் கூற்றுவன் மறத்தைக் காணேம்;
காலனு நகர்நீங்குங் காலம் பார்த்தே;
புறநகர்ப் போந்தவர் புக்கி லிருந்துழியப்
புறநகர்ப் போந்த புல்லுரை கேட்டோம்" என்றவாறு

ஓரினத் துன்பச் செயல்களை மறவாது நினைத்த என்னெஞ்சகம் வெதும்பிற்று. அதனுல், தொடித்தலை விழுத் தண்டூன்றித் தமிழகம் முழுதுஞ் சென்று தமிழிற் சுவை காணும் புது முறைகாட்டிச் சொற் பொழிவால் தமிழ்ப் பைங்கூழ் தழையச் செய்த முகிலனைய பண்டித மணி, மறலி மறம் புகாத அண்ணுமலைநகர் அரணினை விட்டுச் சென்ற பின்றை,

"முத்தமிழ் பாடிய இளங்கோ விவனெனும்
வித்தகன் தவத்தினன் விபுலா னந்தனும்
தொன்னூற் காப்பியத் தொடர்பொருள் வரைந்த
தென்மொழி பெயர்ப்பின் திங்க ளழகனும்
எண்ண மெல்லாந் தமிழே யான
பெண்பெய ரடுத்த சுந்தரப் பெயரனும்
பேரா சிரியப் பெயர்ப்பத நீங்கி
நேராச் சிறப்பி னீடிய வாழ்க்கையர்"

போல ஆயுள்நீட நோயின்றி வாழியர் என்று எண்ணி என் நெஞ்சு அமைதியுற்றது.

பின்னரும், பண்டிதமணி அறிவுடையவரே தஞ் சுற்றத்தவராவர் என்று தம் வாழ்க்கையுள் ஒரு உண்மையை எடுத்துக் காட்டிப், பிறந்த ஊராகிய மகிபாலன் பட்டியில் அச்சுற்ற மின்மைக்கு வருந்தி,

"என்றினி மதுரை காண்பே மெப்பகல் சவுந்த ரேசன்
தன்றிரு வடிகள் காண்பேந் தாயையெஞ் ஞான்று காண்பேம்
வென்றிகொள் தரும வேந்தர் வேந்தனை எந்நாட் காண்பேம்
ஒன்றிய துணையாஞ் சங்கத் துறவையெஞ் ஞான்று காண்பேம்"

என்ற நக்கீரர் பிரிவுச் சொற்களைத் தம்மொடு உளப்படுத்திக் கூறினர். வைப்பு முறையின் நயங்கிளந்து மேற் பாடலை உணர்ந்து சொல்லுங்கால், பண்டிதமணி இலக்கியம் பேசுங்காலை இளமை பெறுங் காட்சியை எஞ்ஞான்று காண்பேனென யான் கவன்றேன். அவர் முதுமை நோய் தீர்க்கு மருந்து இதுவெனக் காணவல்ல மருத்துவனுமாயினேன். "வருந்திய செல்லல் தீர்த்த திறனறி யொருவன் மருந்தறை கோடலிற் கொடிதே" என்னுங் குற்றத்திற்கு ஆளாகாவாறு,

"வகைபடச் சொல்வோய் வலிதுடி நோயின்
பகைபடக் காண்பாய் பழமைத்—தொகைபட
எல்லாத் தமிழிற்கு மின்ப வுரையெழுதல்
வல்லைநோய் நீக்கு மருந்து"

என்று யான் அவரை வேண்டிக்கோடல் பொருத்தமன்றோ.

அண்ணாமலை நகர்ப் புகைவண்டி நிலையத்தில், தமிழ் மணம் பரப்பிய கதிரேசர்க்குப் பிறர் சூழச் சென்று தமிழாசிரியப் பெரு மக்கள் மாலையணிந்து தமிழ் வாழ்க, பண்டிதமணி வாழ்க என்று ஆரவார வொலி எழுப்புவரேல் கால வயப்படுவர் புலவர் என்பதற்கு வேறு செய்தி வேண்டுமோ.

உழைப்பா லுயர்ந்த வொருவ அரசன்
அழைப்பால் நகர்ப்போந்த ஐய—பிழைப்பாய்
பருதிச் சினத்துப் பகைமுகில் போலக்
குருதிக் கொதிப்பைக் குளிர்த்து.

பாவா லுரையால் பசித்த தமிழர்க்கு
நாவா லறிவுணவு நல்கியோன்—மூவா
மொழிவளர் தொண்டின் முதுமையிற் பெற்ற
பழிவளர் நோயே படு.

# வேண்டுகோள்!

வித்துவான். ச, தண்டபாணி தேசிகர் அவர்கள்,
தமிழ்ப்பேராசிரியர், காசிவாசி சுவாமிநாத சுவாமிகள்,
செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்.

"அகஸ்தியன்" ஆசிரியர் அவர்கட்கு :—

தங்கள் தாளில் அவ்வப்போது வரும் சித்தவைத்திய முன்னேற்றக் கட்டுரை பலவற்றையும் பார்த்து மகிழ்பவர்களில் நானும் ஒருவன். ஆவணிமீ 16உ அகத்தியனில் "சித்தவைத்தியர்களுக்கு ஓர் அறிவிப்பு" என்ற தலைப்பில் கண்டவைகளைப்பற்றித் தமிழ் மகனு தலால் கருத்துத்தர வேண்டியது இன்றியமையாததாகின்றது.

வினைக்குழுவில் 'வடிவேலு முதலியார்' (மாஜி தமிழ்ப்பண்டிதர்) என்றும் குறிப்பிட்டு சித்தவைத்திய பிரதிநிதியைக் கண்டு பிடிக்கச் சொல்லியிருக்கிறீர்கள். தமிழ்ப் பண்டிதராக இருந்தால் சித்த வைத்தியம் தெரியாதென்ற எண்ணமா? சித்தவைத்தியம் தமிழ் வைத்தியம். சித்தவைத்திய முன்னேற்றம் தமிழ் முன்னேற்றம். சித்தர் நூல் வெளியிட்டால் தமிழ் வளர்கிறது. தமிழர் கலை வளர்கிறது. இது தமிழுலகத்தின் முழு எண்ணம்.

சித்தவைத்தியம் பரவாமைக்குச் சிறந்த காரணம் சித்தவைத்தியர் தமிழை நன்கு ஆராயாமையும், ஆராய எண்ணமும் முயற்சியும் இல்லாமையுமேயாகும்.

ஆயுர்வேதக் கல்லூரிகளில் வடமொழிச் சிரோன்மணி தேர்ந்த வர்களைச் சேர்த்துக்கொள்ளுகிறார்கள். ஆயுர்வேதிகள் பலர் சிரோன் மணிகளே. சித்தவைத்தியக் கல்லூரிகளிலோ S.S.L.C.படித்தவர்களே சேர்த்துக் கொள்ளப்பெறுகிறார்கள். இது இதுவரையுள்ள செயல்.

தாங்களோ! தங்கள் தீர்மானம் 5-ல் F. A. படித்தவர்கள் வேண்டும் என்கிறீர்கள். நடைமுதல் தமிழாக்ககாலம். தமிழரசி அரசவை ஏறுங்காலம். தோழர், கனம் மந்திரி அவினாசிலிங்கம் அவர் களும் தமிழன்னையை அரசியாக்கி அருங்கலைகள் பலவற்றையும் அவள் தர வாங்கி வழங்கப் போவதாகத் தெரிவிக்கின்றார்கள். இந் நிலையில் F. A. அறிவு சித்தவைத்தியத்திற்கு எவ்வளவு துணை செய்யும் என்பதைச் சிந்தியுங்கள்.

தமிழில் வித்துவான், புலவர், பண்டிதர் தேர்வுகளிற் றேர்ந் தாரைச் சித்த வைத்தியக் கல்லூரிகளிற் சேர்க்கத் தீர்மானஞ் செய்யுங்கள். இந்திய மருத்துவப்பள்ளியில் (L. I. M.) தமிழறிஞர் களைச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று திருத்தம் கொண்டு வாருங்கள்.

ஆயுர்வேதம் ஆரியமொழியை யழைத்து அணைத்து ஆக்கம் அளித்துக் காக்கும்போது சித்த வைத்தியம் ஆங்கில அறிவாளிகளைத் தேடுவது அறிவுடைமையாகுமா? தமிழைப் புறக்கணிப்பது தக்க நீதியாகுமா? சிந்தியுங்கள்.

இவற்றை எண்ணித் தாங்கள் செயல் முறையிற் காட்டின் தமிழுக்கு, தமிழர்க்குச் சிறந்த தொண்டு செய்தவர்களாவீர்கள். செந்தமிழின்றேல் சித்தவைத்தியமும் இன்று.

# இறையன்பினை எழுப்புறும் பாடல்கள்

திருவாட்டி. காமாட்சியம்மை அவர்கள்
பெண்கள் கிறித்துவக் கல்லூரி, சென்னை.

நானிலத் தருக்கள் நல்கு
நறுங்கனி தம்மி னெல்லாந்
தேனினும் இனிய வாய
தேர்ந்திட விரும்பு கில்லேன்
கானமார் தருக்கள் ஈயாக்
கனியெனும் முத்தி பெற்றேன்
நானென திதயத் தோங்கும்
நளிர் பசுங்கா வினின்றே.

அம்புவி நாத னென்னும்
ஆரெழிற் காவின் நீழல்
என்பலம் தீர வைகி
இன்கனி பலவுங் கொண்டேன்
நம்புவீர் என்று மிந்த
நளிர்கடல் சூழ்ந்த வையத்
திம்பரில் எய்த எண்ணும்
இன்சுவைக் கனிகள் வேண்டேன்.

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

(குறள்வெண் செந்துறை)

தண்கடலாம் இறைவ னெழிற்சாகரத் தினுள்ளே
தாழ்ந்தெழுவாய் தாழ்ந்தெழுவாய் தாழ்ந்தெழுவாய் நெஞ்சே
கண்கவரும் மணியினமாம் காதலெனுஞ் செல்வம்
கருங்கடலின் அடித்தரையிற் கண்டெடுப்பாய் அங்கே

நானறியா துள்ளிருக்கும் நற்பிருந்தா வனமே
நாடியதை நாடியதை நாடியதைக் காண்பாய்
தேனமருந் தீங்குழலான் திருவனத்தில் என்றும்
சீலகுணத் தன்பரொடும் லீலைபல புரிந்தான்

எழுங்கனலாம் ஞானவொளி யிலங்கு மணிச்சோதி
ஏற்றிடுவாய் ஏற்றிடுவாய் ஏற்றிடுவாய் நெஞ்சே,
கலங்கமிலா தவ்வொளியுங் கலந்து சுடர்வீசிக்
காலமுழு தென்மனதிற் சாதலின்றி யோங்க

மண்ணிலத்தில் என்னுளமாம் மரக்கலத்தைச் செலுத்தி
வந்தணைவான் வந்தணைவான் வந்தணைவான் யாரோ
விண்ணவருந் தொழும் அவன்பேர் விமலகுருநாதன்
மென்மலராம் பதங்கள்நினைந் தென்மனமே பணிவாய்.

திருவுயர் செல்வி யன்னை
சியாமள வர்ணி தன்னை
உருகிநீ யழைத்தி யாயின்
உள்ளமே சொல்லக் கேளாய்!
மருவியிங் கணைத லின்றி
மறந்தவண் வைகல் செய்யாள்
கருமணி புரையும் மேனி
கரந்திடாள் அன்னை தானே.

ஆர்வமே யுடையை போலும்
ஆதலிற் புகலக் கேள்நீ
சேரிளந் தளிர்க ளோடுஞ்
செம்மலர் கொய்து சாத்திக்
கார்நிறச் செல்வி பாதம்
கமழ் நறுஞ் சாந்தமாக
நேரெழும் அன்பு சூட்டி
நினையுமா நினைதி நெஞ்சே.